10வது ஆண்டில்

விளம்பரம்™
VLAMBARAM™

☎ (416) 282-8059
(416) 282-4978

# உலக தமிழோசை®

ULAKA THAMILOSZAI

சமூக முன்னேற்றப்பத்திரிகை மாதமிருமுறை இலவசம்

நதி 10 JANUARY 15, 2000 பாலம் 02

✲ குழந்தையும் கணணியும் ஒன்றா? (பக். 8)
✲ தன்னிச்சையாக தோன்றிய உலகில் மதம் ஏது? (பக். 14)
✲ சிந்திக்காமல் செயல்படலாமா? (பக். 2)
✲ 1997, 1998, 1999... வீட்டின் விலை அதிகரிப்பு (பக்.17)
✲ சந்திர கிரகணம் தோன்றுவது எப்படி? (பக். 9)
✲ புதிய வாகனம் வாங்க எந்தக்காலம் சிறந்தது? (பக்.3)
✲ ஒரு சாமானியனின் புதிய பார்வை (பக். 5)
✲ ரிக்ஷாக்காரன் எம்.ஜி.ஆர்...... 'பாரத்' (பக்.7)

அனைவருக்கும்
இன்பம் பொங்கும்
இனிய
தைப்பொங்கல்
வாழ்த்துக்கள்!




இழந்த முடியை மீண்டும் பெற வாருங்கள்
சபோனாவிற்கு!
Sabona & Gift
☎: (416) 264-8787 ☎: (416) 269-8151
Markham / Eglinton
(கலைமகள் புத்தக நிலையத்திற்கு உள்ளே)

## அருள் விருந்து

-செ. சிவசுப்பிரமணியம்

☞ இருப்பதும் இறப்பதும் உன்கைவசத்தில் இல்லை. இறைவன் ஆணைப்படி ஆகுக என்று தெளிந்து, உன் கடமையைச் செய்து கொண்டிரு.

☞ வெறுமனே அபயத்துக்குப் போய்க் கொண்டிருப்பது சமயப்பற்றுக்கு அறிகுறியல்ல. தன்னையும் தன் தலைவனையும் தெரிந்து வாழ்க்கையைச் செப்பனிடுவது சமயப்பற்று ஆகும்.

☞ நிலத்துக்கு நீர் பாய்ச்சுபவன் நீரை மடை மாற்றுகிறான். கொல்லன் இரும்பைக் காய்ச்சி நிமித்துகிறான். தச்சன் மரத்தை உருவாக்குகிறான். தவ விரதமுடையோர் தங்களையே செப்பனிடுகின்றனர்.

☞ துன்மார்க்கத்தில் சிக்ககல்கள் பல உள. சன் மார்க்கமோ மிக எளியது.

உலக நாடுகள் வரிசையில் தென் அமெரிக்க நாடுகள்

## கொலம்பியா (Colombia)

தென் அமெரிக்காவில் போதை வஸ்து பொருட்கள் உற்பத்தி செய்வதிலும், அத்தகைய சட்டவிரோதமான உற்பத்திகள், சட்ட விரோதமான 'மாபியா' குழு ஆகியன பெரும் இயக்கமாக செயல்படும் நாடு 'கொலம்பியா' ஆகும்.

பனாமா (Panama), வெனிசுலா(Venezuela) பிறேசில் (Brazil), பீறு(Peru), ஈகுடோர் (Ecuador) மற்றும் பசுபிக் சமுத்திரம் ஆகியவற்றினை எல்லையாக கொண்ட நாடாகும்.

**மொத்த பரப்பளவு:** 439,736 ச. மைல்
**மொத்த குடித்தொகை:** 34,252,000பேர்
1992ஆம் ஆண்டில் புள்ளிவிபரப்படி)
**தலைநகரம்:** பொகொற்றா [Bogota]
**சுதந்திரம்:** யூலை 20, 1810 ஸ்பெயின் ஆதிக்கத்தில் இருந்து சுதந்திரம் கிடைத்தது.
**மொழி:** ஸ்பானிஷ்
**சமயம்:** கத்தோலிக்கர் - 95%

(தொடர்ச்சி 12 பக்கம்)

## உன்னை அறிந்தால்

வாழ்வில் எப்பொழுதும் இரண்டு விடங்களை கையாளுவது மிகவும் கஸ்டமான செய்களாகும். ஒன்று வெற்றி மற்றது தோல்வி. இதனாலோ என்னவோ வெற்றியைக் கொண்டு இறுமாப்பு அடைந்துவிடாதே எனவும் தோல்வியைக் கண்டு துவண்டு விடாதே எனவும் சான்றோர்கள் கூறியுள்ளார்கள் போலும். வெற்றி-தோல்வி எப்பொழுதும் மாறிமாறியே வரும். தோல்வியை வெற்றி நிச்சயமாக மாற்றும். தோல்விகளின் எண்ணிக்கை அதிகரிக்க வெற்றிகள் அண்மித்து கொண்டுவரும். அவ்வாறே வெற்றிகளும் தொடர்ந்துவரும் என எதிர்பார்க்க முடியாது. நெப்போலியன் பொனபாட், ஹிட்லரும் தோற்றவர்கள் தான். வாஜ்பாயும் பிரதமமந்திரியாக வந்தவர்தான் வெற்றிகள் தொடர்ந்து வரும்போது, வெற்றியை நிலைநிறுத்த தொடர்ந்து மிகக் கவனமாக அடுத்த படிகளை எடுத்து வைக்க வேண்டும். தோல்விகள் தொடரும்போது செயல்களை மாற்றவேண்டும் ஒரு செயலைச் செய்து கொண்டு வித்தியாசமான முடிவை எதிர்பார்க்கமுடியாது. எனவே செயல்களை மாற்றுங்கள் நல்ல முடிவுகளை எதிர்பாருங்கள். **சிந்திக்கவும்... செயல்படவும், வெற்றி நமதே!!**

-நெற்றிக்கண்ணன்

விளம்பர வினாடி வினா! CTBC RADIO ✡ SUNDAYS ✡ 7:30 PM



SINGAPORE PAGING
$25.00 +Taxes 200min/Month
$100. FREE PAGER
Nokia 6188 with VIB
CANTEL
Bell Mobility
$50.00 +Taxes / Month
7 a.m. - 7 p.m. 200min இலவசம்
7 p.m. - 7 a.m. கிழமை நாள் இலவசம்
Fri. 7 p.m. - Mon. 7 a.m. இலவசம்
மேலதிக நிமிடம் 12.5 சதம் மட்டுமே
Mobile Message, Call Forwarding, Call Display per second billing included.
மேலதிக விபரத்திற்கு சக்தி: (416) 745-2378
HOTLINE: (416) 980-1234

துரித பணமாற்றுச் சேவை



வவுனியா - கொழும்புச் சுற்றுப் புறங்களுக்கும் - சிங்கப்பூர் - சென்னை ஆகிய இடங்களுக்கு கடுகதியில் பணம் அனுப்புவதற்கு
மு. காசிப்பிள்ளை & சன்ஸ்
☎ (416) 267-8221



சிவாகம கிரியா பீடம்
☎: (416) 724-7480
திருமணம், பதிவுத்திருமணம், பூப்பு நீராட்டு விழா, புண்யாக வாசனம், வீடு குடி புகுதல், திருமணம் விஷேச தனபாக்கிய பூஜை கடை திறப்பு, லக்சுமி பூஜை சிரார்த்த மஹாளயாதி பிதிர் பூஜைகள் மற்றும் ஜோதிஷம் பார்த்தல், ஜனன ஜாதகம் எழுதுதல், விவாகப் பொருத்தம் பார்த்தல், மஹாகணபதி ஹோமம் ஆயுஷ்ய ஹோமம் தாரதோஷ மாங்கல்ய தோஷ நிவர்த்தி ஹோமம் மற்றும் முத்து மணவறையா? தலைஅலங்கார ஜோடனைகளா? ஜடை நாகம் ஆண்டாள் மாலைகளா? தலைப்பாகையா? பரத நாட்டிய அலங்கார ஆபரணங்களா? மற்றும் கல்யாண மண்டபமா? உங்கள் தேவைகளுக்கு அணுகுங்கள். சிவஸ்ரீ ச. கு. ஸ்ரீதரக்குருக்கள் (கண்ணன் குருக்கள்) திருமணப் பதிவாளர் / நிர்வாகி சிவாகம கிரியா பீடம்
5 Greenleaf Terr., Scarborough, Ont.



# அறிவும் ஆக்கமும் (49)

-விஜே குலத்துங்கம்

சென்ற இதழில் Y2K பிரச்சினையைப் பற்றி குறிப்பிட்டு, இது ஒரு தொலை தொடர்பு ஊடகங்களால் மிகைப்படுத்தப்பட்ட ஒரு விடயம் என்றும் குறிப்பிட்டிருந்தோம். அதேபோல புதுவருடமும் பிறந்தது. அநேகர் பயந்ததுபோல எதுவும் நடக்கவில்லை. ஆரம்பத்தில் நடந்த சில இயற்கை அழிவு சம்பவங்களை வைத்து, மூடநம்பிக்கை மிகுந்தவர்கள் 2000 ஆண்டில் உலகம் அழியும் என கூறிவந்தார்கள். பின்னர் இதை கைவிட்டு விட்டு, Y2K ஐ மிகைப்படுத்தினார்கள். Y2K பிரச்சினை இருந்தது என்னவோ உண்மை. ஆனால் செய்தி ஊடகங்கள் கூறிய அளவிற்கு இருக்கவில்லை. வீட்டில் மின்சாரம் இருக்காது, புதுக் கார் என்றால் அதிலுள்ள Computer Chips இயங்காது கார் ஓடாது. பழைய கார் என்றால் வீதிக்கு சென்றால் சிக்னல் விளக்குகள் வேலை செய்யாது. Elevator வேலை செய்யாது. பைப்புகளில் நீர் வராது இப்படியாக பலதும் கூறப்பட்டது. அதிகமான எல்லா நிறுவனங்களும் 1995ம் ஆண்டில் இருந்தே வேண்டிய Y2K ஆயத்தங்கள் செய்யத் தொடங்கி விட்டன. வளர்ச்சியடைந்த நாடுகளில்1998ம் ஆண்டே இந்த ஆயத்தங்கள் எல்லாம் செய்து முடித்து விட்டன.

டிசம்பர் 31ந் திகதி ரொரன்டோ நேரப்படி காலை 5 மணிக்கு Tonga என்ற ஒரு இலட்சம் மக்கள் வாழும் நாட்டில் புதுவருடம் பிறந்தது. ஆனால் அந்த நாடு கொம்பியூட்டர் துறையில் அவ்வளவு வளர்ச்சி அடைந்திருக்கவில்லை. எனவே உலகின் கவனம் எல்லாம் ஓரளவு வளர்ச்சியடைந்த நியூசிலந்து நாட்டிலேயே தங்கியிருந்தது. அங்கு ரொரன்டோ நேரப்படி காலை 6 மணிக்கு புதுவருடம் பிறந்தது. எங்கள் நேரப்படி காலை 7 மணிக்கு நியூசிலந்து அரசாங்கம் அங்கு எந்தவிதமான பிரச்சினைகளும் ஏற்படவில்லை, எல்லா சேவைகளும் சீராக இயங்குகின்றன என அறிக்கை விட்டது. இது உலகெங்கும் ஒரு பெரிய ஆறுதலை அளித்தது. நியூசிலந்து நாட்டில் சிறிது நேரம் Analog ல் இயங்கும் தொலைபேசி சேவைகள் இயங்காமல் விட்டன. இது Y2K யால் ஏற்பட்ட பிரச்சினை அல்ல. ஒரே நேரத்தில் பலர் தொலைபேசி எடுத்ததாலேயே இது ஏற்பட்டது.

அடுத்ததாக காலை 8 மணிக்கு அவுஸ்திரேலியாவில் புதுவருடம் பிறந்தது. அங்கும் எதுவித பிரச்சினையுதும் ஏற்படவில்லை. அதன்பின்னர் சீனா, கொரியா, ஜப்பான் நாடுகளிலும் எந்தவித பிரச்சினைகளும் இல்லாது புதுவருடம் பிறந்தது. ரஷ்யாவிலும் பிரச்சினையில்லாமல் புதுவருடம் பிறந்தது. பொருளாதாரப் பிரச்சினைகளாலும் மற்றும் பல பிரச்சினைகளாலும், ரஷ்யா அவ்வளவாக ஆயத்தங்கள் செய்யவில்லை. அமெரிக்கா Y2K க்கு செலவழித்த பணத்தின் அளவில் 1% அளவு கூட ரஷ்யா இதற்காக செலவழிக்கவில்லை. அப்படியிருந்தும் எந்தவித பிரச்சினையும் ஏற்படவில்லை. Y2K மிகைப்படுத்தப்பட்டதற்கு இது ஒரு நல்ல உதாரணம். இன்னுமொரு நல்ல உதாரணம் உண்டு. 80 களின் பிற்பகுதியில் பிரித்தானிய தொலைபேசி நிறுவனம் ஒன்றும், தென்கொரிய நிறுவனம் ஒன்றும் சில தொலைபேசி உபகரணங்களை ஒரே இடத்தில் இருந்து, ஒரே நேரத்தில் கொள்முதல் செய்தன. இதில் Y2k பிரச்சினை உள்ளதென சென்றவருடம் பிரித்தானிய தொலைபேசி நிறுவனம் ஏறக்குறைய 12 பில்லியன் டொலர்கள் செலவு செய்து, Y2K பிரச்சினை சீர்செய்ததாகக் கூறியது. ஆனால் தென்கொரியா இது தேவையில்லை என ஒரு சதமேனும் செலவழிக்கவில்லை. இரண்டுமே தற்போது சீராக இயங்குகின்றன. முன்னேற்பாடு அவசியம் தான். அதற்காக நன்கு ஆராயாது பல நிறுவனங்கள் அதிகளவு பணத்தை செலவழித்தன.

பல Software, Hardware ஐத் தயாரிக்கும் நிறுவனங்கள் தங்களது முந்திய தயாரிப்புகள் 2000 வருடத்திற்கு ஏற்றதல்ல எனக் கூறி, தங்களது புதிய தயாரிப்புகளை விற்று பெருமளவு பணம் சம்பாதித்துக் கொண்டார்கள். ஒருவேளை இந்த நிறுவனங்களும், மற்றும் கொம்பியூட்டர் ஆலோசகர்களாக இருக்கும் நிறுவனங்கள்தான் இந்த பிரச்சினையை பணம் சம்பாதிக்கும் நோக்கத்திற்காக மிகைப்படுத்தியனவோ என நினைக்கத் தோன்றுகின்றது. Y2K பிரச்சினைகள் இருந்தது என்னமோ உண்மைதான். ஆனால் அலையெல்லாம் தீர்க்கப்பட்டு, அவசிய சேவைகள் எல்லாவற்றிலும் எந்தவித பிரச்சினையும் ஏற்படவில்லை. ஆனால் சிறிய நிறுவனங்களிலும், சிறிய விடயங்களிலும் சில இடங்களில் கவனக் குறைவாக கவனிக்காமல் விடப்பட்டது. இதனால் சில தவறுகள் ஏற்ப்பட்டன.

தென்கொரியாவில் ஒரு நீதிமன்றம், 2000 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 4 ந் திகதி அங்கு ஆஜராகும்படி வழக்காளிகளுக்கு கடிதம் அனுப்புவதற்கு பதிலாக 1900ஆம் ஆண்டு எனக் குறிப்பிட்டார்கள். இவர்கள் பழைய Software ஐ மாற்றாமல் உபயோகித்ததால் இந்த பிழை ஏற்பட்டது. சீனாவில் வாடகைக்கு எடுத்த வீடியோ ஒன்றை ஒருவர் தாமதமாக திருப்பிக் கொடுத்தபோது தாமதக் கட்டணமாக 7000 டொலர்கள் கட்டும்படி, கொம்பியூட்டர் கூறியது. அதாவது 100 வருடங்கள் தாமதமாகியதற்குரிய கட்டணம். இதுவும் கொம்பியூட்டர் 1900ம் ஆண்டு என்று காட்டிதுதான் காரணம்.

Nitendo எனப்படும் நிறுவனத்தின் Poke'mon க்குரிய 'வெப்' (Wep) பக்கத்தில் திகதியைக் குறிப்பிடும்போது 3900 ஆம் ஆண்டு எனக் காட்டியது. இதேபோல் Aukland சர்வதேச விமான நிலையத்தின் 'வெப்' பக்கத்தில் (Web page) ஆண்டு 100 எனக் காட்டியது. Star Trek Voyager இன் Web பக்கத்தில் ஆண்டு 1900 எனக் காட்டியது. ஜப்பானின் அணுசக்தி நிலையங்களில் Y2K பிரச்சினை ஏற்பட்டாலும், பொதுமக்களின் சேவையை பாதிக்கவில்லை. சிறிது நேரத்தில் இப்பிரச்சினை தீர்க்கப்பட்டது. பிலிப்பைன்சில் Fax இயந்திரங்களில் பிழையான திகதியை காட்டியது.

11 வருடங்களாக தமிழர் மத்தியில்

**யோகாஸ்**

☎: (416) 267-0408

## குறுக்கு எழுத்துப் போட்டி இல. 103

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | | 2 | | | ■ | | 3 |
| | ■ | | ■ | ■ | 4 | 5 | |
| 6 | | | | ■ | | ■ | |
| | ■ | | ■ | ■ | | ■ | |
| | | | | 7 | ■ | ■ | |
| ■ | ■ | | ■ | 8 | | | ■ |
| | ■ | ■ | ■ | | ■ | 9 | 10 |
| 11 | | | | | | ■ | |

### இடமிருந்து - வலம்

1.மக்களால் தெரிவு செய்யப்பட்ட இலங்கையின் ஐந்தாவது ஜனாதிபதி
3. தொடக்கம் (வல-இட)
4. கைவேலை
6. பிறந்த நாட்குறிப்பு
7. துன்பம் (வல - இட)
8. ஆலயம்
9. சினங்கொள்
11. இலங்கையையும் இந்தியாவையும் பிரிக்கும் கடல்

### மேலிருந்து கீழ்

1. நடமாட்டம்
2. சுக்கு, மிளகு, திப்பிலி ஆகிய மூன்று மருந்துச் சரக்குகளை சேர்த்து இவ்வாறு கூறப்படும்
3. தமிழீழத்தில் தற்போது (மார்கழி 99) போர் உக்கிரமாக நடைபெறும் இடம்
4. உதவி செய்
5. சட்டம் (கீழ்-மேல்)
7. உடன்பிறந்தவள்
9. கம்பு (கீழ் - மேல்)
10. கட்டு
11. குன்று (கீழ் - மேல்)

சரியான விடைகளில் இருவர் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்படுவர். இவர்களுக்கு "யோகாஸ்" இல் பாவிக்கக்கூடிய $15. $10 Gift Certificates வழங்கப்படும். இதற்கு cash value கிடையாது. விடைகள் JANUARY 27, 2000க்கு முன்னர் விளம்பரம் விலாசத்திற்கு அனுப்பி வைக்கவும்.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| பு | ளி | ய | ங் | கு | ள | ம் | ■ |
| ல் | ■ | ■ | ■ | ற் | ■ | த | ■ |
| லா | நி | ■ | இ | று | ம் | பூ | து |
| ங் | ■ | க | ■ | ■ | ப | ■ | ப் |
| கு | வ | ல | ய | ம் | ■ | ல | ப |
| ழ | ■ | வ | ■ | க | ணை | ■ | றி |
| ல் | ■ | ர | ■ | ங் | ■ | ■ | த |
| ■ | நா | ம் | ■ | அ | ல் | ல | ல் |

**#102இல் வெற்றி பெற்றோர்**

1)T. Subas, Mississauga, Ont.
2.K. Nithya, Scarborough, Ont.

*இலங்கை, இந்திய, கனேடிய உணவுப் பொருட்கள் உடன் ஆட்டிறைச்சி, கோழி, மாடு, மீன், கணவாய் மற்றும் சகல விதமான உணவுப் பொருட்களுக்கும் நாடுங்கள்*

**TAMIL INSURANCE CLAIMS CONSULTANT** தமிழில் இலவச ஆலோசனை

வாகன விபத்து அல்லது வீடு விபத்து ஏற்பட்டால் என்ன செய்ய வேண்டும்?

*தகுந்த ஆலோசனை *சட்ட உரிமை *உரிய நஷ்ட ஈடு
*விபத்துக்குள்ளாலியவர் சம்பள இழப்பீடு
*மற்றும் நுணுக்கமான ஆலோசனைகளும் அறிவுரைகளும் தமிழிலும் ஆங்கிலத்திலும் சிறந்த முறையில் பெற்றுக்கொள்ள 12 வருடகால அனுபவமுள்ளவர்

**ரவி நடராஜா**

TEl:(416) 245-6555 Fax: (416) 245 7766
2095 Weston Rd. #201 (South of HWY 401) Toronto Ont. M9N 1X7

இப்படியாக உலகெங்கும் பாரிய விளைவுகளை உண்டாக்காத சில சிறிய பிழைகள் ஏற்பட்டன. முக்கிய சேவைகள் எல்லாம் முன் கூட்டியே ஆராயப்பட்டு பெரும் பொருட் செலவில் சீரமைக்கப்பட்டன. ஆனால் பிரச்சினை தீர்க்கப்பட்டது என பல நிறுவனங்கள் கூறியும், பலர் அதை நம்பாமல் வீட்டில் பலவிதமான பொருட்களையும் வாங்கிக் குவித்தார்கள். ஆனால் ஒரு நல்ல செய்தி அடுத்த வசந்த காலத்தின்போது Garage Sale இல் பல பொருட்களை மிக மலிவாக வாங்கலாம்.

எது எப்படியிருந்தும், இயற்கை அழிவுகள் எந்த நேரமும் ஏற்படலாம். எனவே எந்தச் சந்தர்ப்பத்திலும் ஒரு Emergency அவசரத் தேவைக்காக அத்தியாவசியப் பொருட்கள் சிலவற்றை வீட்டில் வைத்திருப்பது மிகவும் அவசியம். தற்போது ஜனவரியில் ஒரு பெரிய பனிப்புயல் வரப்போவதாக சிலர் கூறிவருகின்றார்கள். மூன்று நாட்களின் பின்னர் வரும் காலநிலையைப் பற்றியே கூற முடியாத நிலையில்; ஒரு மாதத்தின் பின்னரோ, அல்லது அதன் பின்னரோ வரும் காலநிலை பற்றிக் கூறமுடியுமா? நாங்கள் எப்பொழுதும் நம்பத்தகுந்த, தகுதி வாய்ந்த செய்தி ஊடகங்களின் தகவலின் அடிப்படையிலேயே செயற்படுத்தல் மிகவும் அவசியம்.

**************************

*விஜே குலத்துங்கத்தின் "அறிவுக்கு வேலை கொடு" வானொலி நிகழ்ச்சியை CTR வானொலியில் ஒவ்வொரு செவ்வாய் க் கிழமை இரவு 9மணி க்கு கேட்டு மகிழலாம்.*

*****************************************************

"அறிவும் ஆக்கம்" பற்றிய உங்கள் கருத்துக்களை நீங்கள் எந்த வகையான விடயங்களை இக்கட்டுரையில் எதிர்பார்க்கின்றீர்கள் என்பதை விஜே குலத்துங்கம் - 61 SCARFAIR PATHWAY, SCARBOROUGH, ONT. M1B 4G2 என்ற விலாசத்திற்கு அல்லது wijey@ interlog.com என்ற விலாசத்திற்கு E-Mail ஐ எழுதி அனுப்பவும்.

# APPLEMORE AUTOMOTIVE


உட்புற, வெளிப்புற திருத்த, பராமரிப்பு வேலைகளுக்கு என்றும் உங்கள் மத்தியில்

- Detailing
- Motor Shampoo
- Interior Shampoo
- Exterior Wash
- Waxing




- Repairs
- Safety Certification
- Overall Maintenance
- Under Coating
- Rust Proofing

ONTARIO'S DRIVE CLEAN
Accredited Test & Repair Facility




Tel: (416) 285-4998

2500 Lawrence Ave. East, Unit #11, Scarborough, ON

Apple Apple Apple Apple Apple Apple Apple Apple



## OODAM MAINTENANCE WORKS

Janitorial Services ("Sanitation for the Nation")



* KITCHEN RENOVATIONS
*BATHROOM REVOVATION
*TILES
*PLUMBING



>Railing >Fencing >Welding

Free Estimates

Pl. Call: Thamby - TEL./Fax: (416) 638-2796

18 Brantley Cres. Downsview, NorthYork, M3J 1X5


## உங்களுக்கு தெரியுமா? புதிய வாகனம் வாங்க சிறந்த காலம் (Winter) குளிர்காலம்



இங்கு நான் தரும் விடயங்கள், எனது Honda Sales அனுபவத்தைக் கொண்டது. இவைகள் எனது கருத்துக்களே ஆகும்.

நம்மவர்கள் பலர் புதிய வாகனங்களை வாங்க Winter காலத்தில் விரும்புவதில்லை. Snow இல் அழுக்காகும். உப்புப்பட்டு பழுதவையும் என்பவைகளே காரணங்களாகும். நாம் வாங்கும் வாகனங்களை பாவிப்பதற்காகவே வாங்குகின்றோம். அதை வீட்டின் நடுப்பகுதியில் வைத்து அழகு பார்ப்பதற்காக கிடையாது. அதை முதலில் நாம் மனதில் கொள்ள வேண்டும். இந்த நாட்டில் ஒவ்வொரு வருடமும் கட்டாயம் winter வரத்தான் போகிறது. அத்தோடு Snow ம் வரத்தான் போகிறது. உப்புப் பட்டு பழுதடையும் என்றால் நாம் வாகனத்தை winter காலத்தில் வீட்டுக்குள் வைத்துவிட்டுதான் திரிய வேண்டும். உங்கள் வாகனம் உப்புபட்டு பழுதடையும் என்று நினைப்பவர்கள் அது புதிதாக இருந்தால் என்ன பழையதாக இருந்தால் என்ன, Winter காலத்தில் அடிக்கடி வாகனத்தை கழுவுவது மூலம் உப்பின் பாதிப்பை பெருமளவில் குறைக்க முடியும். வாகனத்தை கழுவும் போது வாகனத்தின் அடிப்பகுதியில் தண்ணீரை விசிறி அடித்து கழுவுவது நன்மை தரும். Coin Car Wash சேமிப்புடன் காரியமும் நடக்க சிறந்த இடம்.

தற்போது Winter வாகனம் ஏன் சிறந்த காலம் என்பதை பார்ப்போம்.

1. Winter காலத்தில் பழைய வாகனங்கள் கோடை காலத்தைவிட கூடுதலாக பழுதடைவது நாம் அறிந்ததே. அந்த Repair செலவை மிகுதப்படுத்தலாம்.

2. Winter காலத்தில் வாகன விற்பனை நிலையங்களில் வியாபாரம் குறைந்து காணப்படுவது வழக்கம். ஆகவே அவர்கள் தங்களுக்கு விற்பனை எண்ணிக்கை தேவை என்பதற்காக நல்ல விலைகளை உங்களுக்கு தருவார்கள். சுருக்கமாக கூறின் மிக குறைந்த விலையைப் பெற்றுக் கொள்ள முடியும். இது வாகனங்களுக்கு மட்டும் அல்ல TV, Computer, Furniture என்று எல்லாவற்றுக்கும் பொருந்தும்.

3. Winter காலத்தில் வாகனத்தில் பாதுகாப்பாக பிரயாணம் செய்ய முடியும்.

குறிப்பு- உங்கள் வாகனங்களுக்கு ஒவ்வொரு Full Tank Gas நிரப்பும் போது Gas Anti Freeze ஐ ஒரு சிறிய போத்தல் Gas Tank க்குள் விடுவதால், Winter காலத்தில் உங்கள் வாகனங்களின் சில பிழைகளை தடுக்க முடியும். இவை Canadian Tire இல் கிடைக்கும்.

மேலதிக தொடர்புகளிற்கு - **சோதீஸ்** *Cell (416) 704 -1179*


## நியூ மிலேனியத்தில் ஸ்காபரோவில் 9 வது வருட தன்னிகரற்ற சேவை

உங்கள் சகலவிதமான ஐரோப்பிய, ஜப்பானிய, அமெரிக்க வாகனத்திருத்த வேலைகளுக்கும் நீங்கள் நாட வேண்டிய ஒரே இடம்

Also Air Conditioning Service & Repair


NTE AUTO INC.
New Trade Engineering

என். ரி. இ. ஓட்டோ இங்க்

Contact: Sivabalan சிவபாலன்

Tel: (416) 750 - 1573

151 NANTUCKET BLVD., UNIT #12, SCARBOROUGH, ONT.



In New Millennium We are entering 9th year service in Scarborough


## விடுகதை நேரம்

1. இருவர் பார்க்க, பத்துபேர் எடுக்க, ஒருவர் ருசிப்பார் அவர்கள் யார்? **கண், விரல், வாய்**
2. இவன் வெளியே இருந்தால், உள்ளே யாரும் இல்லை? அவன் யார்? **பூட்டு**
3. கல்லைக் கண்டால் தண்ணீரைக் காணோம், தண்ணீரைக் கண்டால் கல்லைக் காணோம். அது என்ன? **பனிக்கட்டி**
4. கிணற்றைச் சுற்றி வெள்ளைக் கற்கள், அது என்ன? **பற்கள்**
5. தவறுதலாக தொட்டால், ஒட்டிக் கொண்டு உயிரை எடுப்பான்? **மின்சாரம்**
6. குப்பை தின்பான், கூளம் தின்பான் தண்ணீரைக் கண்டால் செத்துக் கிடப்பான்? **தீ**



# ஆரோக்கிய வாழ்வு (49)

- N. செல்வசோதி

## வயிற்றில் வலி, வாயுத் தொல்லை - யோக சிகிச்சை

இரப்பை, குடல் கேடால் அப்பாகங்களில் வாயு உண்டாகும். இது குடலைப் பெருக்கச் செய்து வெளியேறாது நிற்கும் பொழுதும் வெளியேற முயற்சிக்கும் பொழுதும் வலி ஏற்படும். இரப்பையில் உண்டாவது ஏப்பமாக சத்தத்துடன வாய்மூலம் வெளிவரும். இதில் நாற்றமும் சற்று புளிப்பும் கலந்திருக்கும்.

__குடலில் வாயு__ - பெருங்குடலில் உருவாகிச் சிறுகுடலுக்குள் பரவும் போது குடல பருத்து பெரும் அசௌகரியங்களையும் அனுபவிக்க வேண்டி ஏற்படும். அத்துடன் இரப்பையும் குடலும் எந்த உணவுப் பொருளை உண்டாலும வாயுவை உண்டாக்கும் தன்மை பெற்று விடுகின்றன. முக்கியமான இனிப்பு நிறைந்த உணவுகளும் கடலைகள் பருப்பு வகைகள் போன்றவைகளும் வாயுவை உண்டாக்கும்.

__இந்த நோய் ஏற்படக் காரணங்கள்__

1. மென்று தின்னாமல் விழுங்குதல்
2. பசியில்லாத பொழுது உண்ணுதல்
3. அடிக்கடி உண்ணுதல், அளவுக்கு அதிகமாக புலால், பருப்பு வகைகளை உண்ணுதல்.
4. பொரித்த, தாளித்த, மாச்சத்து நிறைந்த உணவுகளை அதிகமாக உண்ணுதல்.
5. காலியான வயிற்றோடு காப்பி, டீ , மதுபானம் போன்றவற்றை குடித்தல்.

__பொருத்தமான உணவு__

அரிசிக்குப் பதிலாக கோதுமையை உபயோகிக்கலாம். உணவில பாசிப்பருப்புடன் மோர் அதிகமாகச் சேர்க்கவும். நீர் கலந்து காய்ச்சிய பால், தக்காளி, கீரை வகைகள் நன்மை தரும்.

__பட்டினி__ வாரத்தில் ஒரு பொழுது உணவை நிறுத்தியும் இருவாரங்களுக்கு ஒருநாள் உணவை முற்றாக நிறுத்தினால் நன்மை தரும். ஒருநாள் பட்டினி இருக்கும் போது நீரின் தேவைக்குத் தக்கபடி அருக்தலாம். பட்டினி முடிந்ததும் பழரசங்களையோ நீர் கலந்து காச்சிய பாலையோ அருத்தலாம்.

__சிகிச்சைத் திட்டம்__

| ஆசனங்கள் | முறைகள் | ஒவ்வொரு முறையும் நிறுத்தும் காலம் |
|---|---|---|
| 1. தனுராசனம் | 4 | 5 முதல் 10 விநாடிகள் |
| 2. பட்சிமொத்தாசனம் | 3 | 5 முதல் 15 விநாடிகள் |
| 3. ஹலாசனம் | 4 | 4 முதல் 10 விநாடிகள் |
| 4. சர்வாங்காசனம் | 2 | 2 முதல் 5 நிமிடம் |
| 5. சிரசாசனம் | 1 | 1 முதல் 4 நிமிடம் |
| 6. சவாசனம் | 1 | 3 முதல் 5 நிமிடம் |
| 7. நாடிசுத்தி | - | 5 முதல் 10 நிமிடம் |

__குறிப்புகள்__ மேலே கொடுக்கப்பட்ட முழுத் திட்டத்தையும் பழக எட்டு வாரங்கள் எடுக்கவும். நோய் தீரும்வரை தொடர்ந்து செய்து வரவும். அத்துடன சுத்தமான நீரை அதிகம் அருந்தி வந்தால் சிறுநீர் மூலம் ரத்தத்திலுள்ள கழிவுப்பொருட்கள் வெளியேறுவதுடன் உண்ணும் உணவு இலகுவில் சமிபாடடைய வழி பிறக்கும். இதனால் வாயு குடலில் உண்டாக இடமில்லை.


**யோகாசன வகுப்பு**

யோகாசனப் பயிற்சிகள் மூலம் உங்கள் உடல் நலத்தைப் பேணுங்கள். யோகாசனப் பயிற்சி வகுப்புக்கு தொடர்புகொள்ள

இடம்: Woburn Collegiat e (Markham /Ellesmere)

நேரம்: 7:30 am - 8:30am தொடர்புகளிற்கு: - சத்தி: 291-5853



**கலைமகள் புத்தக நிலையம்**

•சிறுவர்களிற்கான நீதிக்கதைகள்
•தமிழ்ப் புத்தகங்கள்
•கனடிய தமிழ்ப் பத்திரிகைகள்
•இலங்கை/இந்திய பத்திரிகைகள்
•குறுங்கதைகள், சரித்திரப் புத்தகங்கள்
•CREDIT LEVEL தமிழ் பாடப்புத்தகங்கள்
•கனடிய தமிழ்ப் பிரசுரங்கள் மற்றும் பலப் பல

துரித பணமாற்றுச் சேவை

594 PARLIAMENT ST. TORONTO, ONT. ☎: (416) 921-5018

3238 Eglinton Ave., East Scarborough, Ont. ☎: (416) 265-3605

3850 FINCH AVE. E. GO 1A SCARBOROUGH, ONT. ☎: (416) 292-9319

2580 Sheppard Ave. #9 Newin Centre Mall Mississauga, Ont. ☎: (905) 306-0494



**Neelam SILK**

**நீலம் சில்க்**

2000ஆம் ஆண்டின் புதிய புடவைத் தெரிவுகளை நம்மவர்களுக்கு அறியத்தருகிறார்கள் 'நீலம் சில்க்'

உயர்ரகப் பட்டுப் புடவைகளிற்கு நீலம் சில்க்

- முகூர்த்தப்பட்டு புடவைகள்
- பாரம்பரிய பட்டுப் புடவைகள்
- Thread Work பட்டுப்புடவைகள்
- ரிசு சேலைகள்
- காஞ்சி 2000 ரிசு சேலைகள்
- Emboss Tissue சேலைகள்,
- Cut Work சேலைகள்
- அபூர்வா 2000 Cut Work



__புதிய வெளியீடுகள்__

மைசூர் சில்க் சேலைகள், சோனா மீனா (Sona Meena) புதிய டிசைன்கள். இவை மட்டுமல்ல இன்னும் பலவித தெரிவுகள்

"தமிழர் மத்தியில் ஓர் தரமான பட்டுப்புடவை மாளிகை"

'நீலம் சில்க்'

1453 GERRARD STREET EAST (Indian Bazzar)

CALL: (416) 778- 7455 FAX: (416) 778-8484


__இவரைத் தெரிகிறதா!__



ரமணி சந்திரன் என்ற புனைபெயரில் கதைகள் எழுதும் ரமணி பாலசந்திரன். இவரின் கணவன் பெயர் பாலச்சந்திரன். இரண்டு பிள்ளைகள் அரிவிந்த, அகிலா இதுவரை ஏறத்தாள 70 நாவல்கள் எழுதியுள்ளார். இவரின் கதைகள் யாவற்றிலும் முடிவுகள் சந்தோசமாகவே இருக்கும்.


கனடாவில் முதன்முதலில் தலைவாழை விருந்து படைத்தவர்கள்

**கிராமத்து விருந்து**

RESTAURANT, CATERING, TAKE OUT L.L.B.O.



603 Kennedy Road, Scarborough, Ont. ☎: (416) 266-4240

**TAKEOUT ONLY**

சிக்கன் அல்லது பீவ்(Beef) முஸ்லிம் ஸ்ரைல் பிரியாணி, தலை வாழையிலையில் ஆக $5.99 மட்டுமே

__மட்டக்களப்புக்கு பணம் அனுப்ப__

மட்டக்களப்புக்கு 24 மணி நேரத்தில் பணம் உரியவர்களிடம் ஒப்படைக்கப்படும். புளியந்தீவு, ஏறாவூர், செங்கலடி, வாழைச்சேனை, கல்முனை மற்றும் மட்டக்களப்பு டவுண் அழைக்கவும் ஜோசப் (416) 266-4240

ஒரு சாதாரண மனிதரின் சிந்தனையில்.....

## புதிய நூற்றாண்டில் பழைய பாடங்கள்



வழமைபோல் பொழுது விடிந்தது, சூரியன் உதித்தது. ஒரு புதிய நாள் பிறந்தது. அந்த ஒரு நாளை மனிதனால் மனிதனுக்காக கணிக்கப்பட்ட கிழமைகள், மாதங்கள், வருடங்கள், நூற்றாண்டுகள், நல்லாயிரங்கள் ஒன்றின் முதலாவது நாளாக எடுக்கப்பட்டது. அந்த நாளில் என்ன நடக்குமோ, உலகம் உருளுமோ என்பது போன்ற கேள்விக்குறியுடன் கூடிய பயஉணர்வை மனிதனுக்கு கொடுக்கக் கூடிய வகையில் மனிதனுக்கு, மனிதனால் கண்டு பிடிக்கப்பட்ட விஞ்ஞான உலகத்தில் இருந்து Y2K என்ற பெயரில் சில ஆண்டுகளுக்கு முன் சாதாரண மனிதர்களின் மனங்களில் தெளிக்கப்பட்டது. நாள் நெருங்க நெருங்க அந்தப் பயத்தை மனித மனங்களில் காட்டுத் தீ போல வளர விட்டு சாதாரண மனிதர்களை தம்வசப்படுத்தி பெரும் பொருள் ஈட்டிக் கொண்டன மக்கள் தொடர்பு சாதனங்கள். அட சாதாரண மனிதனே ஏன் கலங்குகின்றாய். Y2K யினால் மனித இனத்திற்கு அழிவு வருமா, வராதா என்று உண்மையை சொல்லி மனிதனின் பயத்தை போக்க எந்த விஞ்ஞானியும் முன்வரவில்லை. ஒருவேளை அவர்களுக்கே தெரியாமல் இருந்து இருக்கலாம். முன் வந்தவர்களையும் மனிதர்கள் நம்பவில்லை. அதனால் எரிகின்ற வீட்டில் பிடுங்கியது ஆதாயம் என்பது போல பயம் கொண்ட மனிதரில் சிலர் பல நூறாண்டு வாழ்வதற்கு வேண்டிய உணவையும், நீரையும், Generator களையும் வாங்கி வைத்து Y2K யை வென்று விடலாம் என்று எண்ணியவர்களிடம் இருந்த பயத்தை காசாக்கிக் கொண்டார்கள் வர்த்தகர்கள். இவ்வாறு Y2K யில் மனிதன் பீதியடைந்திருக்க, வழமை போல பொழுதும் விடிந்தது, சூரியன் உதித்தது, புதிய நாளும், புத்தாண்டு, புதிய நூற்றாண்டு, புதிய நல்லாயிரம் ஆண்டின் முதலாவது நாளாக பிறந்தது. அதில் உள்ள பழைய பாடம் என்னவெனில் மனிதன் விஞ்ஞானியோ, சாமானியனோ முன்னோக்கி எடுத்து வைக்கும் ஒவ்வொரு அடியையும் கவனமாக எடுத்து வைக்க வேண்டும். இல்லையேல் இன்னும் பல நூற்றாண்டுகள் மனிதன் பார்க்க முடியாமல் அழிவைக் கொடுத்து விடும் என்பதே.

அந்தப் புதிய நூற்றாண்டின் புதிய நாளில் மனித இனத்திற்கும் அப்பாற்பட்ட சக்தி ஆகிய இயற்கை எனும் சக்தி அமைதியாக இருந்து Y2K என்ன அதன் அப்பனான விஞ்ஞான உலகத்தையே ஒரு நொடியில் தகர்த்து விடக்கூடிய ஒரு பூகம்பத்தையோ, புயல் காற்றையோ, பெருவெள்ளத்தையோ கொடுத்து மனித இனத்தை கலங்க வைக்காமல் காத்தமைக்காக அந்த இறைவனுக்கு நன்றி சொல்லி வாழ்க்கையை தொடர்வோம்.

*சிந்தனையும் தொடரும்......*

*பரம். G. ஒரு சாதாரண மனிதன்*


# உலக தமிழோசை நடாத்தும் விளம்பர வினாடி வினா

இப் போட்டி நிகழ்ச்சி பிரதி வாரந்தோறும் ஞாயிற்றுகிழமை மாலை 7:30 மணிக்கு 24 மணிநேர தனித்தமிழ் வானொலியில் (CTBC) கேட்கலாம்

இப்போட்டியின் நோக்கம் - "தமிழ் மக்களின் அறிவையும், ஆற்றலையும் வளர்ப்பதே இந்நிகழ்ச்சியின் நோக்கமாகும்"

| | | |
|---|---|---|
| பெயர் | - | விளம்பர வினாடி வினா! |
| நிகழ்ச்சி | - | ½ மணி நேரம் |
| பரிசு | - | $25 பெறுமதியான பத்திரம் (Voucher) குறிப்பிட்ட வியாபார ஸ்தாபனத்தில் பாவிக்க முடியும் |

நிபந்தனைகள் -

1. 10 கேள்விகள் கேட்கப்படும். 7 இற்கு மேற்பட்ட வினாக்களிற்கு விடை தரவேண்டும்
2. 5 வினாடிகள் வழங்கப்படும் நிகழ்ச்சி நடத்துபவரின் முடிவே இறுதியானது.
3. குறிப்பிட்ட நிகழ்ச்சியில் ஒருவரிற்கு மேற்பட்டவர் 7 அல்லது 7 இற்கு மேற்பட்ட வினாக்களிற்கு சரியாக விடை கூறினால், அவரே வெற்றி பெற்றவராக கொள்ளப்படும். மேலும் இரண்டிற்கு மேற்பட்டவர்கள் ஒரே எண்ணிக்கையான சரியான பதில்கள் கூறினால், நிகழ்ச்சி நடத்துனர் குலுக்கல் மூலம் ஒரு அதிஸ்டசாலியை தெரிவு செய்வார்.

குறிப்பு

1. வினாக்களின் விடைகள் ஏற்கனவே விளம்பரம், உலக தமிழோசை பத்திரிகையில் வந்திருக்கும்.
2. வினாவிற்குரிய விடை ஒன்றிற்கு மேற்பட்டதாக இருப்பினும் விளம்பரம், உலக தமிழோசை பத்திரிகையில் வந்தவிடையே சரியெனக் கொள்ளப்படும்.
3. இப்போட்டி நிகழ்ச்சி 'உலக தமிழோசை' (விளம்பரம்) பத்திரிகையின் ஆதரவில் நடைபெறுகின்றது.



EZ DRIVING SCHOOL



நவீன தன்னியக்க வாகனங்களில் சொந்த மொழியில் பயிற்சி விளக்கங்களுடன் அரச அனுமதி பெற்ற பயிற்சியாளரிடம் பயிற்சி பெற தொடர்புகொள்ளுங்கள்

JEYAKUMAR © (416) 283-4100

Cell: 822-6741 (10 வருடகால அனுபவ பயிற்சியாளர்)


### பெற்றோலியம் உற்பத்தியில் முன்னணியில் வரிசை கிரமங்களில் உள்ள உலக நாடுகள்

| நாடுகள் | ஒரு நாளுக்கு உற்பத்தி செய்யும் அளவு (பரல்கள்) |
|---|---|
| 1. சவூதி அரேபியா | 9375 பரல்கள் |
| 2. அமெரிக்கா | 8255 " |
| 3. சோவியத் ரசியாவுடன் சேர்ந்த நாடுகள் | 6215 " |
| 4. ஈரான் | 3730 " |
| 5. மெக்சிக்கோ | 3410 " |
| 6. வெனிசுலா | 3365 " |
| 7. சீனா | 3210 " |
| 8. ஐக்கிய அரபு நாடுகள் | 2700 " |
| 9. கனடா | 2560 " |
| 10. நைஜீரியா | 2285 " |
| 11. குவைத் | 2095 " |
| 12 இந்தோனேசியா | 1560 " |
| 13.லிபியா | 1465 " |
| 14. அல்ஜீரியா | 1440 " |
| 15. ஈராக் | 1210 " |

(மேற்குறிப்பிட்ட தகவல்கள் 1997ம் ஆண்டின் உற்பத்தியினை அடிப்படையாக வைத்து பெறப்பட்டது. இதன் அளவுகள் அடிக்கடி மாறுதல் அடைவது உண்டு.)

*ஆதாரம் - "ரொரன்ரோ ஸ்ரார் 18/12/1998)*




# விளையாட்டுத் தகவல்கள் (45)

-எஸ். கணேஷ்



## 1999 இன் கிரிகெட் முக்கிய தரவுகள்

1999இன் ஆண்டு 43 டெஸ்ட் (Test) ஆட்டங்கள் ஆடப்பட்டன. இதில் முக்கியமாக 1912ஆம் ஆண்டிற்கு பின்பு முதல் தடைவயாக 99இல் Test Champion ships போட்டிகள் நடைபெற்றன. இது Asian Test Champion Ship என அழைக்கப்பட்டது. பங்களாதேஷ் இன் நகரமான டாக்காவில் இறுதியாட்டத்தில் பாகிஸ்தான் அணியும் இலங்கை அணியும் மோதின. மேலே குறிப்பிட்ட 99 இல் விளையாடப்பட்ட 43 டெஸ்ட் ஆட்டங்களில் 14 ஆட்டங்கள் வெற்றி தோல்வி இன்றி முடிவடைந்தன.

- மொத்தமாக 99இல் 195 வீரர்கள் 43 டெஸ்ட் ஆட்டங்களில் ஆடினர்.
- சவுத் ஆபிரிக்கா ஒரே ஒரு நாடு 99 இல் நடைபெற்ற எந்த டெஸ்ட் ஆட்டத்திலும் தோல்வி பெறவில்லை. 99இல் சவுத் ஆபிரிக்கா ஆடிய 10 டெஸ்ட் ஆட்டங்களில் 6 ஆட்டங்களில் வெற்றியும், 4 ஆட்டங்களில் சமநிலையும் பெற்ற ஒரேஒரு நாடாகும்.
-சிம்பாவே ஒரே ஒரு நாடு எந்த டெஸ்ட் ஆட்டத்திலும் வெற்றி பெறவில்லை.
-ஸ்ரீலங்கா ஒரே ஒரு நாடு Home or Away மைதானத்தில் தோல்வி எனவும் 99இல் நடைபெற்ற டெஸ்ட் போட்டிகளில் வெற்றி பெறவில்லை. ஆனால் நடு நிலை மைதானம் ஆகிய டாக்காவில் ஒரு தோல்வியை மட்டும் பெற்றனர்.
- சச்சின் தெண்டுல்கார் ஒரே ஒரு வீரர் 99இல் 5 சதங்களை டெஸ்ட் ஆட்டங்களில் பெற்று கொண்டவர்.

- Daryll cullinan, Gary Kristen ஆகிய சவுத் ஆபிரிக்காவின் இரு வீரர்கள் மாத்திரமே 99இல் டெஸ்ட் ஆட்டங்களில் 275 ஓட்டங்களை ஆட்டமிழக்காமல் பெற்றனர்.

- அவுஸ்திரேலியர் Adam Gilchrist 99இல் டெஸ்ட் ஆட்டத்தில் அதிவேகமாக 200 ஓட்டங்களைத் தாண்டியவர். 101 பந்துகளில் 200 ஓட்டங்களை எடுத்தார்.

- ஸ்ரீலங்கா விக்கெட் கீப்பர் ஆன ரொமேஸ் கலுவுத்திரன அதிகூடிய Stumps (39) எடுத்த ஒரே ஒரு Keeper, 99ஆம் ஆண்டில் டெஸ்ட் ஆட்டத்தில் ஆகும்.

## 99இல் அதிகூடிய மறக்கமுடியாத ஒரு சம்பவம்

99 World Cup போட்டிகளில் பலரும் எதிர்பார்த்த ஒரு நாடு சவுத் ஆபிரிக்கா ஆகும். சவுத் ஆபிரிக்காவும், அவுஸ்திரேலியாவும் அரை இறுதியாட்டத்தில் (Semi Final) மோதுகின்றன. சவுத் ஆபிரிக்கா 205 ஓட்டங்களை 9 விக்கெட் இழப்பிற்கு 49 ஓவர் முடியும் போது எடுத்திருந்த நேரம்; கடைசி ஓவர் இந்த அரை இறுதியாட்டத்தில் வீசப்படும் நேரம்; 9 ஓட்டங்களை மட்டுமே எடுக்க வேண்டிய நேரம்; 6 பந்துகள் கையில் இருக்கின்றன. ஒரு முனையில் World Cup இன் Man of the Series விருது பெற்ற Klusener நிற்கிறார். மறுமுனையில் Donald நிற்கிறார். முதல் பந்தில் Klusener 4 ஓட்டங்கள், இரண்டாவது பந்தில் Klusenre மீண்டும் 4 ஓட்டங்கள் ஆக ஒரு ஓட்டத்தை மேலும் 4 பந்துகளில் எடுத்தால் காணும் என்கின்ற நிலைமை Klusener பந்தை தட்டி விட்டு ஓடுகிறாா, அடுத்த வக்கெடடுக்கு போய்விட்டு தான் பார்க்கின்றார். Donald ஓடவில்லை, எங்கும் ஒரே நிசப்தம், மின்னல் ஒளிக்கும் நேரத்தில் அவுஸ்திரேலிய வீரர் Gilchrist பந்தை கையில் பிடித்து Stump செய்கின்றார். ரசிகர்கள் கூட்டத்திற்கு கூடத் தெரியவில்லை என்ன நடந்தது என்று, கண்ணிமைக்கும் நேரத்தில் அவுஸ்திரேலியாவிற்கு கூட நம்பமுடியவில்லை தாம் வெற்றிபெற்று விட்டோம் என்று Klusenerம் Donald ஒரு விக்கெட் முனையிலேயே நிற்கின்றனர் மறுமுனையில் Stump செய்யப்பட்டுவிட்டது. சவுத் ஆபிரிக்க தோல்வி. தோல்வியின் விளிம்பில் நின்ற அவுஸ்திரேலியா வெற்றிபெற்று இறுதியாட்டத்தில. பாகிஸ்தானையும் வெற்றிபெற்றுவிட்டது. அதிஸ்டாமேன்று இதைத்தான் சொல்லுவார்கள் போலே!!!

### 1999இல் Team Records (Test Matches Only)

| | ஆட்டங்கள் | வெற்றி | தோல்வி | சமநிலை |
|---|---|---|---|---|
| 1. சவுத் ஆபிரிக்கா | 10 | 6 | 0 | 4 |
| 2. அவுஸ்திரேலியா | 14 | 9 | 3 | 2 |
| 3. ஸ்ரீலங்கா | 9 | 2 | 1 | 6 |
| 4. நியூசிலாந்து | 13 | 4 | 6 | 3 |
| 5. பாகிஸ்தான் | 8 | 3 | 4 | 1 |
| 6. இந்தியா | 10 | 2 | 4 | 4 |
| 7. மேற்கிந்திய அணி | 8 | 2 | 6 | 0 |
| 8. இங்கிலாந்து | 8 | 1 | 4 | 3 |
| 9. சிம்பாவே | 6 | 0 | 4 | 2 |

### 1999 இல் Test ஆட்டங்களில் அதிகூடிய ஓட்டங்கள் (Most Runs)

| பெயர் | நாடு | ஆட்டங்கள் | இனிங்கஸ் | ஓட்டங்கள் | அதிகூடிய ஓட்டங்கள் |
|---|---|---|---|---|---|
| 1. Sr. Tendulkar | இந்தியா | 10 | 19 | 1088 | 217 |
| 2. MJ. Slater | அவுஸ்திரேலியா | 14 | 25 | 1051 | 169 |
| 3.SR. Waugh | " | 14 | 22 | 993 | 199 |
| 4. Rt. Ponting | " | 11 | 17 | 883 | 197 |
| 5. R. Dravid | இந்தியா | 10 | 19 | 865 | 190 |
| 6. DJ. Cullinan | சவுத் ஆபிரிக்கா | 10 | 14 | 855 | 275 |

### 1999இல் Test ஆட்டங்களில் அதிகூடிய விக்கெட்டுகள் (Most Wickets)

| பெயர் | நாடு | ஆட்டங்கள் | ஓவர்கள் | ஓட்டங்கள் | விக்கெட்டுகள் | Best |
|---|---|---|---|---|---|---|
| 1. GD. Mcgranth | அவுஸ்திரேலியா | 14 | 560 | 1425 | 67 | 5-28 |
| 2. A. Kumble | இந்தியா | 10 | 581 | 1461 | 54 | 10-78 |
| 3. Sm. Pollock | சவுத் ஆபிரிக்கா | 10 | 396 | 803 | 48 | 5-33 |
| 4.Cl. Cairns | நியூசிலாந்து | 10 | 337 | 944 | 47 | 7-27 |
| 5. J. Srinath | இந்தியா | 9 | 392 | 1205 | 44 | 8-86 |

### 1999 இல் (ODI) ஓவர் ஆட்டங்களில் அதிகூடிய ஓட்டங்கள் (Most Runs)

| பெயர் | நாடு | இனிங்கஸ் | ஓட்டங்கள் | அதிகூடிய ஓட்டங்கள் |
|---|---|---|---|---|
| 1. Sc. Ganguly | இந்தியா | 41 | 1767 | 183 |
| 2. R. Dravid | இந்தியா | 43 | 1761 | 153 |
| 3.Me. Wauga | அவுஸ்திரேலிய | 36 | 1468 | 106 |
| 4. Ac. Gilchrist | " | 37 | 1241 | 154 |
| 5. A. Jadeja | இந்தியா | 34 | 1144 | 154 |




### 1999 இல் (ODI) Ov ஆட்டங்களில் அதிகூடிய விக்கெட்டுகள் (Most Wickets)

| பெயர் | நாடு | ஆட்டங்கள் | ஓவர்கள் | ஓட்டங்கள் | விக்கெட்டுகள் | BEST |
|---|---|---|---|---|---|---|
| 1. SK. Warne | அவுஸ்திரேலியா | 37 | 329 | 1442 | 62 | 4-29 |
| 2. GD McGrath | அவுஸ்திரேலியா | 27 | 241 | 983 | 52 | 5-14 |
| 3.Azhar Mohmood | பாகிஸ்தான் | 27 | 230 | 865 | 46 | 6-18 |
| 4. Shoaib Akatar | " | 21 | 168 | 711 | 38 | 4-37 |
| 5.Muralitharan | ஸ்ரீலங்கா | 28 | 249 | 884 | 38 | 4-16 |


YARL WINDOW
BLINDS & DRAPERY

கடந்த 8 வருடங்களாக தமிழ் மக்களின் நன்மதிப்பை பெற்ற எமது நிறுவனம் எமது முதலாவது ஸ்காபரோ, கிளையை 1530 Warden Ave. திறந்திருப்பதை மகிழ்வுடன் தெரிவிக்கின்றோம்.

* உங்கள் வீடுகள் / வியாபார நிலையங்களிற்கு தேவையான சகல வித (இறக்குமதி செய்யப்பட்ட) நல்ல ரக கேட்டின் (Curtain), Blinds, Window Coverings
* நல்ல ரக துணிவகைகள் மொத்தமாக / சில்லறையாக
* Bed cover, Pillow, Cushion போன்றவற்றையும் எங்களிடம் பெற்றுக்கொள்ளலாம்.

ஒரு முறை விஜயம் செய்து பாருங்கள்

தொடர்புகளுக்கு என். செல்வம்

☎: (416) 650 - 0377 (416) 419-9247

1530 Warden Avenue (Warden / Ellesmere)
Scarborough



உங்கள் குழந்தையின் எதிர்கால கல்வியில் ஒரு சிறு தொகையை முதலிடுவதுடன்



கனேடிய அரசின் கல்விக்கான மானியம் $400 இலவசம்!

☆ TWO YEAR DIPLOMA program ஐ வெற்றிகரமாக முடிப்பதன் மூலம் சகல புலமைப் பரிசில்களையும் பெற முடியும்.



♥ அரச அங்கீகாரம் பெற்ற புலமைப் பரிசில் சேமிப்பு திட்டம்.(R.E.S.P)
♥ உலகின் எந்தப் பாகத்திலும் அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிறுவனங்களில் கல்வி பெறலாம்.
♥ இன்னும் பல சலுகைகள் உண்டு.

இலவச ஆலோசனைகள் பெற எந்த நேரமும் தொடர்பு கொள்ளலாம்.

தொடர்புகளுக்கு - சீலன் .A
The Children Education Trust of Canada
Tel: (416) 451- 0271 pager: (416) 980-9836

# அன்றிலிருந்து இன்றுவரை சினிமா

## 1931 ஆம் ஆண்டு தொடக்கம் வெளியான படங்கள்

*-தொகுப்பு - பரம் & சண்*

### 1971

1. அன்னை வேளாங்கன்னி* 2. அருணோதயம்
3. அன்புக்கு ஒரு அண்ணன்* 4. அருட்பெருஞ்ஜோதி
5. அவளுக்கென்று ஒரு மனம்*
6. ஆதிபராசக்தி* 7. இரு துருவம் *
8. இருளும் ஒளியும் *
9. உத்தரவின்றி உள்ளே வா * 10. உயிர்
11.ஒரு தாய் மக்கள் 12. கண்ணன் கருணை
13. கண்காட்சி * 14. குலமா குணமா
15. குமரிக் கோட்டம் * 16. கெட்டிக்காரன்
17. சபதம் 18. சவாலே சமாளி *
19. சுடரும் சூறாவளியும் 20. சுமதி என் சுந்தரி *
21. சூதாட்டம் 22. தங்க கோபுரம்
23. தங்கைக்காக 24. திருமகள்
25. துள்ளி ஓடும் புள்ளிமான்
26. தெய்வம் பேசுமா 27. தேனும் பாலும்
28. தேரோட்டம் 29. தேன் கின்னம்
30. நான்கு சுவர்கள் * 31. நீதி தேவன்
32. நீரும் நெருப்பும் * 33. நூற்றுக்கு நூறு
34. பாபு 35. பிராப்தம்
36. புதிய வாழ்க்கை 37. புன்னகை
38. பொய் சொல்லாதே 39. மீண்டும் வாழ்வேன்*
40. முகமது பின் துக்ளக் 41. மூன்று தெய்வங்கள்*
42. யானை வளர்த்த வானம்பாடி
43.ரங்க ராட்டினம் (மகன்* 44. ரிக்ஷாக்காரன் *
45. வீட்டுக்கு ஒரு பிள்ளை * 46. வெகுளிப் பெண்
47. ஜஸ்டிஸ் விண்வனாதன்

இவ்வருடம் வெளியான தமிழ சினிமாப் படங்கள் அத்தனையும அனைத்துத் தரப்பு இரசிகர்களையும் கவர்ந்த படங்களாகும். பல புதிய இயக்குநர்களும் பழைய இயக்குநர்களும் போட்டி போட்டுக் கொண்டு தத்தமது திறமையை வெளிக்காட்டியிருந்தார்கள்.

எம்.ஜி.ஆர், சிவாஜி, ஜெமினி, நாகேஷ், முத்துராமன், ஏவி.எம்.ராஜன், ஜெய்சங்கர் என முன்னணி நட்சத்திரங்கள அனைவரும் வெளுத்துக கட்டியிருந்தனர். சிவாஜி அவர்கள் தலைமை நடிகராக எல்லோரையும் விட அதிகமாக பத்து படங்களில் நடித்திருந்தார். அருணோதயம இருதுருவம் (ஹிந்தியில திலிப்குமார் நடித்த கங்கா ஜமுனா) குலமா குணமா, சவாலே சமாளி, சுமதி என் சுந்தரி, தங்கைக்காக, தேனும் பாலும், பாபு, பிராப்தம், மூன்று தெய்வங்கள் என வித்தியாசமான பாத்திரப படைப்புகளில் தூள கிளப்பியிருந்தார்.

மல்லியம் ராஜகோபால் என்பவரது படமான 'சவாலே சமாளி' சிவாஜி அவர்களது 150 வது படமாக வெளிவந்து பெரும் வெற்றியைப் பெற்றது. 'சுமதி என் சுந்தரி' படத்தில முதன் முதலாக சிவாஜிக்குப் பின்னணிப் பாடகராக எஸ். பி. பாலா அவர்கள் பாடியிருந்தார். திருமதி. சாவித்திரியின் சொந்தத் தயாரிப்பான 'பிராப்தத்தில்' சிவாஜி அவர்கள் நட்புரிமையுடன் நடித்துப் படத்தை பிரமாதப்படுத்தியிருந்தார். பத்மினி, சரோஜா தேவி இருவரும் நாயகியாக நடித்த 'தேனும் பாலும்' சிறந்த குடும்பச் சித்திரம். A.C. திருலோகசந்தர் இயக்கிய 'பாபு' என்கிற படத்தில் சிவாஜி அவர்கள ரிக்ஷாக்காரன் பாத்திரத்தில் தோன்றி மிக இயல்பாகவும் கதையோடு ஒட்டியும நடித்திருந்தார். ஆனாலும் அதே ஆண்டு எம்.ஜி. ஆர். அவர்கள் நடித்த 'ரிக்ஷாக்காரன்' படத்திற்காக இந்திய அரசு அவருக்கு 'பாரத்' பட்டம் வழங்கிக கௌரவித்தது. இப்பட்டத்தை 'ரிக்ஷாக்காரன்' வேடத்திற்காக வழங்கினார்களா அல்லது எம்.ஜி. ஆரைக் கௌரவிக்க வேண்டுமென்பதற்காக வழங்கினார்களா என்பதில் இன்றளவும் எனக்குக் குழப்பமாகவே இருக்கிறது.

பாத்திரப்படைப்பு என்று பார்த்தால் 'பாபு' ரிக்ஷாக்காரனே முதலிடம், எம்.ஜி.ஆர். அவர்கள் 'ஒருதாய் மக்கள்', 'குமரிக் கோட்டம்', நீரும் நெருப்பும்', 'ரிக்ஷாக்காரன்' ஆகிய நான்கு படங்களில் மட்டுமே நடித்திருந்தார். பழம்பெரும் நடிகர் எம்.கே. ராதா இருவேடங்களில் நடித்த 'அபூர்வ சகோதரர்கள்' படத்தை 'நீரும் நெருப்பும்' என்று எம்.ஜி. ஆரை இரட்டை வேடங்களில் நடிக்க வைத்திருந்தனர். வசூலில 'ரிக்ஷாக்காரன்' சக்கை போடு போட்டது. இயக்குநர் பாலச்சந்தர் 'நான்கு சுவர்கள்' என்று வித்தியாசமான கதையைப் படமாக்கினார். காந்திஜியின் நூற்றாண்டு நினைவாக அவரது தத்துவங்களைப் பெருமைப்படுத்தும் விதமாக சத்தியபுருஷனாக ஜெமினி கணேசன் அவர்களை வைத்து 'புன்னகை' என்கிற அருமையான சமூகப் படத்தையும் திரு. பாலசந்தர் இயக்கியிருந்தார். பக்தியும் அருளும மிக்க படங்களான 'அன்னை வேளாங்கன்னி', 'அருட்பெருஞ்சோதி', 'ஆதிபராசக்தி' ஆகிய படங்களும வெளியான குடும்பக் கதை மன்னனான இயக்குநர் கே.எஸ். கோபாலகிருஷ்ணன் அவர்களில பக்திப்படமும் என்னால் எடுக்க முடியும என 'ஆதிபராசக்தி' மூலம நிரூபித்தார்.



'ரிக்ஷாக்காரன்'- மஞ்சுளாவுடன்

மறைந்த பிரதமர் இந்திராகாந்தி அவர்களது ஆட்சியையும் நிர்வாகச் சீர்கேடுகளையும் விமர்சனம் செய்யும் விதமாக பல தடவை மேடையேற்றப்பட்ட 'சோ' அவர்களது 'முகமது பின் துக்ளக்' நாடகம் துணிச்சலுடன திரைப்படமாகக்கப்பட்டு வெளியானதும் இவ்வாண்டேயாகும்.

### 1971ம் ஆண்டில் சென்னை சினிமா இரசிகர் சங்கத்தின் விருதுகள் விபரம்

| | |
|---|---|
| படம்: | பாபு |
| நடிகர். | சிவாஜி கணேசன் (பாபு) |
| கதை: | K. பாலச்சந்தர் நூற்றுக்கு நூறு |
| டைரக்டர்: | K. பாலச்சந்தர் " |
| நடிகை: | வாணிஸ்ரீ (இருளும் ஒளியும்) |
| துணை நடிகர்: | முத்துராமன் ( சூதாட்டம்) |
| துணை நடிகை: | தேவிகா (வெகுளிப் பெண்) |
| குழந்தை நட்சத்திரம்: | சேகர் (அன்னை வேளாங்கன்னி ) |
| பின்னணி: | TMS, P. சுசீலா |
| இசை: | M.S. விஸ்வநாதன் (பிராப்தம்) |
| சிறப்புப் படம்: | அன்னை வேளாங்கன்னி |

இவ்விதம் ஜெய்சங்கர், முத்துராமன், ஏ.வி.எம். ராஜன் எனப் பலரதும் குடும்பப்பாங்கான கதையமைப்புக் கொண்ட பல நல்ல படங்கள் வெளிவந்தன. இலங்கை இயக்குநர், கதாசிரியர் திரு. வி. சி. குகநாதனின் 'சுடரும் சூறாவளியும்' படம் வெளிவந்த சிறப்பு மிகு ஆண்டு 1971 ஆகும்.

***(சினிமாப் பதிவுகள் தொடரும்)***

# நான் வாழப் போகிறேன்



-வீணை மைந்தன்

## சுவடு 46

இயக்குநர் பாரதிராஜா அவர்கள் நடிகர் திலகம் அவர்களிடத்து மிகுந்த பக்தியும், மரியாதையும் கொண்டவர். சிவாஜி அவர்களிடத்து தான் கொண்டிருந்த மரியாதையை திரைப்படமாக எடுத்துக் காண்பிக்க வேண்டும் என்ற ஆவலில் உதயமானதே 'முதல் மரியாதை' திரைப்படம். இப்படம் பற்றிக் கூறும்போது 'என்னை நடிக்க விடாமல் ராஜா இயக்கிய படம்' என்று சிவாஜி அவர்கள் வேடிக்கையாகக் கூறுவார். இப்படத்தில் சிவாஜி அவர்களது வழக்கமான விஸ்வருபம் அட்டகாசம், ஆரவாரம் எதுவுமே இருக்காது. பாரதிராஜா அவர்கள் சிவாஜி அவர்களை தன் விருப்பத்திற்கேற்றவாறு பயன்படுத்தியிருப்பார்.

அதே போன்று பாரதிராஜா அவர்கள் 'பசும்பொன்' என்றொரு படத்தையும் சிவாஜி அவர்களை வைத்து இயக்கியிருந்தார். நடிகர் திலகம் நடிக்கும் படங்களில் அவரை இயக்குபவர்களும் வசனம் எழுதுபவர்களும் சிவாஜி அவர்களிடத்துள்ள பெருமைகளை பாத்திரத் தன்மையோடு ஒட்டிப் பெருமைப்படுத்துவார்கள். அப்படியாக ஒரு காட்சி 'பசும்பொன்' திரைப்படத்தில் இடம் பெறும். துரைராசுத் தேவர் என்ற பணக்காரப் பெரியவராக சிவாஜி வருவார். அவருடைய மகளாக ராதிகா நடித்திருப்பார். ராதிகாவின் முதல் கணவனின் மகன் தேவருக்குப் பேரன். ஒரு காட்சியில் பேரன் சிவாஜியைப் பார்த்து "தாத்தா ஊரில் உள்ளவர்கள் உங்களைக் கண்டதும் எழுந்து நின்று வணங்குகிறார்களே அவ்வளவுக்கு நீ பெரிய ஆளா...", என்று கேட்பான். சிவாஜி (துரைராசுத் தேவர்) சிரித்துக் கொண்டு "அப்படித்தான் எல்லாரும் பேசிக்கிறாங்க..." என்று சாதாரணமாகக் கூறுவார்.

உண்மையும் அதுதான். கலையுலகம் அந்த பீஸ்மருக்கு அப்படித்தான் வணக்கம் செலுத்தி வருகிறது. அந்த வணக்கத்திற்குரிய நடிகர் திலகத்துடன் நெருங்கிய நட்பும்... தொழில் ரீதியில் ஐம்பது ஆண்டுகளாக ஒன்றாக இயங்கியும் வந்த சிவாஜி அவர்களின் நல்ல நண்பர்களுள் ஒருவரான திரு. வி.கே. இராமசாமி அவர்கள் தனது அன்பு நண்பன் பற்றிக் கூறுவதை இங்கு பார்ப்போம்.

சிவாஜியும் நானும் 1950 இலிருந்து நெருக்கமாக இருக்கிறோம். அவர் நடித்த 'மக்களைப் பெற்ற மகராசி', 'வடிவுக்கு வளைகாப்பு', 'செல்வம்', ஆகிய படங்களைத் தயாரித்தவன் அவர் ஆத்மார்த்தமான நண்பர் கடந்த காலத்தை மறவாதவர். அன்று நாடக உலகில் எங்களுடன் இருந்தவர்களில் பலர் இன்று நீலிந்து போய் இருக்கிறார்கள். அவர்களுக்கு அவ்வப்போது உதவிசெய்து வருகிறார். அந்த மாதிரி உதவும் மனப்பான்மை சிவாஜியிடத்துக் குடிகொண்டுள்ள மிகுந்த நல்ல குணம்.

இன்றைக்கும் நாடக நடிகர்களைப் பார்த்தால் வரவேற்று மனங்குளிரப்பேசி தம்மால் முடிந்த உதவிகளைச் செய்வார் சிவாஜி. ஒரு மனிதன் சாதாரண நிலையில் இருப்பது வேறு. அவர் வளர்ந்து ஓகோவென்று உயர்ந்த நிலைக்கு வந்த பிறகு நம்மை அழைத்துச் சரிசமமாக உட்காரவைத்துப் பேசுவது என்றால்.. அதுதான் கடந்த காலத்தை மறவாத அருங்குணம்!

அவரைச் சந்திக்கும் போதெல்லாம்.. "வா... ராமு...." என்று வாய் நிறையக் கூப்பிட்டு உட்கார வைத்து பேசுகிறாரே அது எத்தனை பேருக்குக் கிடைக்கும். சிவாஜி போன ஜென்மத்தில் செய்த நல்ல காரியங்களினால் இந்த ஜென்மத்தில் கலை உலகில் ஆலமரமாக இருந்து எத்தனையோ குடும்பங்களுக்கு வாழ்வளித்து வருகிறார். சுமார் முந்நூறு படங்களுக்குமேலாக நடித்திருந்தாலும் இன்றைக்கும் ஏனோ தானோ என்று நடித்துவிட்டுப் போகமாட்டார். ஒரு புதுமுகத்தைப் போல ஆர்வத்துடன் நடிப்பார்.

அவருக்கு இன்று உடலில் சற்று சோர்வு தெரிகிறதே தவிர உள்ளத்தில் தொழில் அக்கறையில் சோர்வு என்பதே இல்லை. என்னுடைய ஐம்பது வருட கலையுலக வாழ்வில் நானறிந்த வரையில் பெரும் புகழுடன் கலையுலகில் நிலைத்தவர்கள் இருவர். ஒருவர் மக்கள் திலகம் எம். ஜி. ஆர். அவர்கள் இன்னொருவர் என் இனிய நண்பர் நடிகர் திலகம் அவர்கள்.

சிவாஜி நடித்த படங்களை திரைப்படக் கல்லூரியில் பாதுகாத்து அந்தப் படங்களைப் பாடமாக பார்க்கச் சொல்லவேண்டும். இதனால் கலையுலக ஈடுபாடுவரும் இந்தத் தலைமுறையினர் நடிப்பை நன்கு அறிய முடியும். இன்று நடிக்க வருபவர்களுக்கு நல்ல குருகுலம் இல்லை. அன்று பல நாடகக் கம்பனிகள் இருந்தன. அந்த மாதிரி நாடகக் கம்பனிகளை இன்று தனிப்பட்டவர்கள் நடத்த போதிய வாய்ப்பு வசதி கிடையாது.

முதல் மரியாதை



மேலை நாடுகளில் நாடகக் கலைக்கு என ஒரு பகுதி உள்ளது. அங்கே ஆண்டு முழுவதும் நாடகங்கள் நடைபெறுகின்றன. அதைப் போல சென்னையிலும் ஒரு குறிப்பிட்ட இடத்தில் அரசாங்கமே ஒரு தியேட்டரைக் கட்டி நாடகங்களை மட்டும் நடத்த வேண்டும். இதனால் தமிழ் நாட்டிலுள்ள நாடகக் கலைஞர்களுடன் நடிப்புக் கலையும் வளரும், திரையுலகுக்கும், தொலைக்காட்சிகளுக்கும் மேலும் பல நட்சத்திரங்கள் கிடைப்பார்கள். என்னுடைய இந்த ஆதங்கத்தை அரசுக்கு எடுத்துச் சொல்ல தகுதியானவர் சிவாஜி அவர்களேயாகும். சிவாஜி சகாப்பத்தில் வளர்ந்தேன். அவருடைய முதலாவது படமான 'பராசக்தியிலிருந்து பல நூற்றுக்ணக்கான படங்களில் அவருடன் இணைந்து நடித்துப் பெருமையடைந்தவன் என்பதில் எனக்கு மிகவும் பெருமையாகவும், மகிழ்சசியாகவும் உள்ளது.

அந்த ஆலமரநிழலில் ஒதுங்கி நிழலை அனுபவித்தவர்களில் நானும் ஒருவன் அவரைப் பற்றி வரலாறு எழுதப்படும்போது எனக்கும் அதில் ஒரு இடம் உண்டு என்பதே எனக்குக் கிடைக்கும் பெரும் பேறாகும். ***(சுவடுகள் தொடரும்)***

# 21ஆம் நூற்றாண்டில் கணணி இல்லாமல் மனிதன் வாழமுடியுமா?


-ராஜா சொக்கலிங்கம்
Computer Consultant



## பகுதி (2)

### கணணியின் உட்பாகங்களும் அதன் தொழிற்பாடும் தொழில்நுட்பங்களும்

கணணியை இன்று சிறுவர் முதற்கொண்டு முதியவர்கள் வரை உபயோகித்து வருகின்றார்கள். இவர்கள் இந்த கணணியை படிப்பதற்காக, விளையாட்டிற்காக, வியாபாரத்திற்காக, விளம்பரத்திற்காக, பொழுது போக்கிற்காக இப்படியாக இதை உபயோகிப்பதை சொல்லிக்கொண்டே போகலாம். தொழில் ரீதியாக பாவிக்கும் Computer Systemத்திற்கும், பொதுவாக எல்லோராலும் பாவிக்கப்படும் Computer System த்திற்கும் நிறைய வேறுபாடுகள் உள்ளன. பொதுவாக எல்லோராலும் பாவிக்கப்படும் Computer System த்தினுள் என்ன உள்ளது. இவற்றை சற்று விரிவாகப் பார்த்தால்...




### தமிழில் நீங்கள் தெரிந்து கொள்ளவேண்டிய கலைச்சொற்கள்

1. Monitor - கணித்திரை2. Keyboard - விசைப்பலகை
3. Mouse - சுட்டி 5. Printer - அச்சு இயந்திரம்
6. CPU - மத்திய இயக்கப்பகுதி (செயலி) கருவி
7. Out put Device - வெளிக்கொண்டுவரும் கருவி

கணணி இயக்கத்தை ஒரு குழந்தையினுடைய இயக்கத்திற்கு இணையாக நினைத்துப் பார்க்கவும். நாம் ஒரு குழந்தைக்கு ஒரு கட்டளை (Comand) இடுகிறோம். அதை அந்த குழந்தை கண்களால் பார்த்து அல்லது காதினால் கேட்டு மூளையில் யோசிதது அதை வாயினாலோ அல்லது கைகளினாலோ தன் பதிலை தெரிவிக்கின்றது. இதே தொழிற்பாட்டைத் தான் கணணியும் செய்கின்றது. நாம் என்ன நினைக்கிறோமோ அதை Keyboard ஆலும் Mouse ஆலும் தெரிவிக்கின்றோம். அதே போலத்தான் குழந்தையும் கண்களால் பார்க்கின்றது அல்லது காதால் கேட்கின்றது. Keyboard ம் Mouse ம் தகவல்களை மத்திய பகுதி CPU (Central Processing Unit) க்கு அனுப்புகின்றது. குழந்தையின் கண்களும், காதுகளும் தகவல்களை குழந்தையின் மத்தியபகுதியான மூளைக்கு அனுப்புகின்றது. அங்கு மூளை என்ன செய்வது எப்படி செய்வது என்று சிந்திக்கின்றது. பின்னர் அது சிந்தித்ததை வாயினால் பேசவும் கைகளினால் காட்டவும் முடிகிறது. அதே மாதிரித்தான் இந்தக் கணணியும் தான் நினைப்பதை Printer இல் Print பண்ணி காண்பிக்கும் அல்லது Monitor இல் காண்பிக்கும். CPU என்பது எல்லாத்தையும் அடக்கி செய்யக்கூடிய தொழிற்பாடு அங்குதான் நடைபெறுகின்றது. இந்த அடிப்படையை புரிந்து கொண்டால் உலகத்தில் உள்ள Computer Mechanism (கணணி வேலை செய்யும் நுட்பம்) அத்தனையும் இதுதான். Input Device, Cpu, output Device டாவனை ஆகிய இந்த மூன்றும் தான் முக்கியமானவை. வேறு எதுவுமல்ல. கணணியின் வளர்ச்சி கூடிக்கொண்டே போக இது இன்னும் மாறுபடலாம், ஆனால் அடிப்படை என்பது இதுதான் கண், காதுகளில் ஆயிரம் மாற்றங்கள் செய்தாலும் கண் கண்தான், காது, காதுதான். இது அடிப்படை. இதை நீங்கள் புரிந்து கொண்ட போது இந்த கணணியை ஒரு குழந்தையைப் பார்ப்பது போல பார்த்தால், அந்த கணணி இயக்கத்தை மனதில் வைத்துக் கொண்டு ஒரு குழந்தையுடன் பழகுவது போல் பழகும் போது இன்னும் கணணி உங்களுக்கு உதவியாக இருக்கும். நீங்கள் செய்யமுடியாத வேலையை இந்த கணணியால் செய்யமுடியும். நீங்கள் ஒரு சிறிய குண்டூசியை கையினால் எடுப்பது கடினம். ஆனால் ஒரு காந்தத்தை வைத்து இலகுவாக எடுக்க முடியும். அந்தக் காந்தம் சும்மா இருந்தால் அந்த ஊசியை எடுக்க முடியாது. ஆனால் நாங்கள் அந்த காந்தத்தை இயக்குவதால் காந்தத்திற்கு சக்தி (Power) அதிகமாகின்றது. ஆனால் நாங்கள் அதை இயக்காவிட்டால் அது வெறும் காந்தம் தான். ஆகவே அந்த இயக்கம் உங்களிடம் தான் உள்ளது. உங்களிடம் அந்த இயக்கம் இல்லாவிட்டால் அந்த ஊசியை எடுக்கமுடியாது. அதேபோல கணணி குழந்தைபோல் இருந்தால் கூட அது உங்களால் இயக்கப்பட்டால் அது உங்களை விட அறிவாளியாகிவிடும். ஆனால் அதை நீங்கள் இயக்காவிட்டால் அது அறிவாளி இல்லை. இது தான் அடிப்படை இயக்கம். இதை புரிந்து கொண்டால் கணணியை இயக்குவது சுலபம்.

இன்னும் வரும் வாரங்களில் ஒவ்வொரு பகுதியையும் தனித்தனியே பார்ப்போம். CPU என்றால் என்ன? CPU இன் பகுதிகள் எப்படி வேலை செய்கின்றது. Monitor என்றால் என்ன? அதில் எத்தனை வகை உள்ளது. நீங்கள் கடையில் Monitor வாங்கும் போது எதைக் கவனிக்க வேண்டும். என்பதையும் இன்னும் பலவற்றையும் இனிவரும் இதழ்களில் பார்ப்போம். நீங்கள் ஒரு கணணியை பார்க்கும் போது அது எப்படி இயங்குகிறது என்பதை விட அதன் பாகங்களை அறிந்து வைப்பது நல்லது. இவைகள் தெரிந்தாலே கணணியைப் பற்றி 50 வீதம் உங்களுக்கு தெரியும். மிகுதி 50 வீதம் கணணி இயக்கும்.

10 பக்கம்

(தொடரும்)

மேலதிக தகவல்களிற்கு www.howstuffworks/category.computers.htm


# Safety Truck
## Training School Ltd.

**Training & Trucking**
**Classes A, D & Z**

கனடாவில் ஆரம்பிக்கப்பட்ட முதலாவது தமிழ்
TRUCK DRIVING பயிற்சி இடம் (6ம் ஆண்டு)
வாரத்தில் ஏழு நாட்களும் பயிற்சிகள் வழங்கப்படும்.




தமிழ் மொழி மூலம் அனைத்துப் பயிற்சிகளும் தனித்தனியாகக் கொடுக்கப்படும். (One on One Training) அனுமதிப்பத்திரத்திற்கு (License) உத்தரவாதம் அளிக்கப்படும்.
வேலை எடுப்பதற்கும் உதவிகளும் ஆலோசனைகளும் வழங்கப்படும்

**In Classes**
- 365 (Learning Permit)
- Lock Books
- Air Brake (Z)
- Dangerous Goods
- Border Crossing
- Defensive Driving Course

சிறந்த பயிற்சி பெற அழையுங்கள்

**YOGAN SOCKALINGAM**
Truck Driving போதனாசிரியர்
(12 Years Canadian Experience with Trucks)

**Tel: (416) 616-5979 / (905) 793-9546**

**250 Summerlea Road, Brampton, ON**




### ஜேம்ஸ் வாட்

1736 ஆம் ஆண்டு ஸ்கொட்லாந்து நாட்டில் பிறந்தவர். நீராவி இயந்திரத்தைக் கண்டுபிடித்தவர். இவர் தொழில் புரட்சியை உருவாக்கியவர் என்று கூறக்கூடியவர். இந்த நீராவி இயந்திரங்கள் இங்கிலாந்தின் தொழிற்துறையை மாற்றி அமைத்தது.


# YARLCAN
## STEAM CLEANING





உங்கள் சகலவிதமான
**Cleaning**
தேவைகளுக்கும்
அழையுங்கள்
மோகன்

**Tel: 724-9085**
**Pager : 600 -0335**
**Cell: 721-9709**

## சூரியக்குடும்பம் 25 விண்வெளி தருபவர்- கனி

கிரகணம் ஒன்று நிகழ்வதற்கான தார்ப்பரியம் என்னவென்று இப்பொழுது எமக்கு ஓரளவுக்கேனும் விளங்கியிருக்கும் என எண்ணுகின்றேன். இவ்விஞ்ஞான அல்லது அறிவியல் ரீதியிலான விளக்கங்கள் எவ்வளவுதான், எவ்வளவு காலங்களுக்குத்தான் தொடர்ச்சியாகக் கொடுக்கப்பட்டாலும் கூட புராண, ஐதீகக் கதைகளின் தாக்கங்கள் எமது நெஞ்சை நெருடிக் கொண்டேதான் இருக்கும். கேதுவையும், ராகுவையும் எம்மால் மறக்கவும் முடியாது! நிராகரிக்கவும் முடியாது! அப்படித்தானே!

சந்திரகிரகணம் எப்படி நிகழ்கின்றது என இன்று பார்ப்போம். சந்திர கிரணமானது பௌர்ணமி தினங்களில் இரவில் தோன்றும். எல்லாப் பௌர்ணமியிலும் இது நிகழ்வதில்லை. சந்திரனானது எமது பூமியின் நிழலுக்குள் மறையும் போது இந்தச் சந்திரகிரகணம் தோன்றுகின்றது. சந்திர கிரகண நிகழ்வொன்றினை பார்ப்போமேயாயின்அது பின்வருமாறு தோற்றும் பிரகாசமான பூரண சந்திரன் முதலில் பூமியின் நிறைவணுக்கு நிழலுள் நுளையும். இந்நிகழ்வின் போது சந்திரன் சிறிது சிறிதாக மங்கலடையும். இந்த நிறைவணுகு நிழலைக் கடக்க சந்திரனுக்கு சுமார் ஒரு மணித்தியாலங்கள் வரை எடுக்கும். அதன் பின் சந்திரன் எமது அம்புலி சிறிது சிறிதாக கரு நிழற்கூம்பினுள் நுளையும். இந்நேரத்தில் சந்திரன் கொஞ்சம் கொஞ்சமாக இருளை அடையத் தொடங்கும். சுமார் ஒரு மணித்தியாலத்தில் அம்புலி முற்றாக இருளை அடைந்து விடும். இந்நிலை 'பூரண சந்திர கிரகணம்' எனப்படும். சுமார் 1 மணித்தியாலம் 45 நிமிடங்கள் வரை இந்த பூரண சந்திர கிரகணம் நிற்கும். ஆயினும் இந்த நேர இடைவெளிகள் பூமியின் நிழலின் எப்பகுதியை சந்திரன் கடக்கிறது என்பதைப் பொறுத்தே அமையும். பின் மீண்டும் நிறைவணுகு நிழலுள் வந்து பின்னர் பூமியின் நிழலை முற்றாகக் கடந்து விடும். பூரண சந்திரகிரகணத்தின் போது பூமியின் கருநிழற் கூம்பினுள் சந்திரன் முற்றாக வந்த போதும் முற்றாக மறைவதில்லை. இது ஏனெனில் பூமியைச் சுற்றிக் காணப்படும் வளி மண்டலமாகும். இவ்வளி மண்டலத்தைக் கடக்கும் சூரியனின் ஒளியானது நேராகச் செல்லாது முறிவடைந்து சற்று பூமியின் உட்புறமாகத் தனது பாதையை அமைக்க அச்சிறுபகுதி வெளிச்சம் இருளில் இருக்கும். எமது அம்புலி,ைய சந்திரனை கொஞ்சமாகக் காட்டிக் கொடுக்கும் (இந்த ஒளி முறிவின் காரணமாகவே காலையில் சூரியனைக் காணும் முன்பும், மாலையில் சூரியன் மறைந்த பின்னும் பகல் பொழுதை நாம் அனுபவிக்கின்றோம்.) இந்த நேரத்தில் சந்திரனில் இருந்து பூமியை ஒருவர் பார்ப்பாரே ஆயின் அவருக்கு பூமியின் வளிமண்டலம் சென்னிற ஒளிர்வாகத் தெரியும். சூரியன் தெரிவதில்லை. இந்தச் சென்னிற ஒளிர்வுள்ள கதிர்கள் பூரண சந்திர கிரகணத்தின்போது சந்திரனை மெலிதான சென்னிறத் தட்டாக ஒளிர்வடையச் செய்யும்.

சில சமயங்களில் சந்திரனின் பாதையில் கருநிழற்கூம்பு சந்திரனின் ஒரு பகுதியையே மறைக்கும் இந்நிலையில் சந்திரனின் ஒரு பகுதி மங்கலாகவும் மறுபகுதி இருண்ட மெல்லிய சென்னிறமாகவும் காணப்படும். இதனைப் 'பகுதிச் சந்திர கிரகணம்' எனக் கூறுவோம். வேறு சில சமயங்களில் சந்திரனின் பாதை பூமியின் நிறைவணுகு நிழலின் ஊடாக மாத்திரமே செல்லும். இந்நிலையில் சந்திரன் சற்று மங்கலாகக் காணப்படுமே தவிர இருளடைவதில்லை. இந்நிலை எமக்கு பெரிய மாற்றத்தைக் காட்டுவதில்லை. அதனால் அதனை நாம் எமது கருத்தில் பெரிதாக எடுப்பதில்லை.

பொதுவாக வருடத்திற்கு ஒன்று அல்லது இரண்டுக்கு மேற்பட்ட சந்திர கிரகணங்கள் தோன்றுவதில்லை. (ஆனால் வருடத்திற்கு 12 பூரணை தினங்கள் வரும்.) எனவே ஒவ்வொரு பூரணையும் சந்திர கிரகணமாக அமைவதில்லை. சந்திர கிரகணத்தைப் பார்ப்பது அவ்வளவு கஷ்டமான காரியமில்லை. பூமியின் நிழைலைச் சந்திரன் கடக்கும் போது பூமியினது இருண்ட பகுதியில் நாம் இருந்தால் சந்திர கிரகணத்தைக் காணலாம். கடைசியாக கடந்த வருடத்தின் யூலை 28ம் திகதி ஒரு பகுதிச் சந்திர கிரகணம் தோன்றியது. அடுத்து வரக்கூடிய சந்திர கிரகணங்களின் அட்டவணையை இங்கே தருகிறேன். விஞ்ஞானிகளின் கணிப்பின்படியான சந்திர கிரகணங்களுக்கான அட்டவணை இது.

| வருடம் திகதி | பூராணை சந்திர கிரகண நேரம் | சந்திரகிரகண காலம் |
|---|---|---|
| 2000 ஜனவரி 21 | 76 நிமி. | 4மணி. 38 நிமி. |
| 2000 ஜீலை 16 | 106நிமி | 5 மணி 42 நிமி |
| 2001 ஜன 9 | 60 நிமி | 4 மணி 16 நிமி |
| 2001 ஜீலை 5 | பகுதிச் சந்திரின் | 2 " 38 " |
| 2003 மே 16 | 52 " | 4 " 06 " |
| 2004 ஒக்டோ.28 | 80 " | 3 " 52 " |


*அடுத்த தடவையில் சூரிய கிரகணம் பற்றிப் பார்ப்போம்.*


மொன்றியால் நகரில் கீழ்வரும் வர்த்தக நிறுவனங்களில்
'உலக தமிழோசை' பத்திரிகையை வாசகர்கள்
பெற்றுக் கொள்ளலாம் என்பதை அறியத் தருகிறோம்.


மார்சே மயில் - சோவே - ☎: (514) 389-5236
மார்சே எமி- -பிளமொன்டன் - ☎: (514) 731-5368
மார்சே மாருதி - ஜன்தலோன் - ☎: (514) 270-9511

**V.N.T. AUTO COLLISION**

* Complete Collision Service
*Unibody Frame Straightening
* Under Coating & Rust Proofing
* All Mechanical & Electrical Repairs
* உட்புற வெளிப்புற பராமரிப்பு
*Tuneup & Brakes
* Oil Change & Lubrication
*Insurance Claims
*Free Estimates




200 FULLER ROAD
UNIT #4A
PICKERING, ONT.
TEL: (905) 426-5136




**MOVING VAN MOVING VAN**

ஏயர்போட்டிற்கு பிரயாணிகள் போய் வருவதற்கான சேவைகளும், மற்றும் பொருட்களை இடமாற்றம் செய்வதற்கான சேவைகளிற்கு



☎: (416) 759-0557

**RENOVATION**
**KATHIR & ASSOCIATES**



※ Complete Basement
※ Bath Rooms
※ Kitchen
※ Plumbing
※ Painting



போன்ற உங்களின் சகல விதமான திருத்த
வேலைகளிற்கும் அழையுங்கள் : (416)804-5628


## நடிகர் திலகம் 2000



'விளம்பரம்' பத்திரிகையில் ஆரம்பித்து தொடர்ந்தும் புதிய நாமத்தைத் தாங்கி வரும் **'உலக தமிழோசை'**, இவ்விதழில் தொடரும் 'நான் வாழப்போகிறேன்' தொடர் கட்டுரை 'நடிகர் திலகம் - 2000' எனும் நூல் வடிவில் தயாராகிறது.

இக்கட்டுரையைத் தொடர்வதற்கு நல்லாதரவு வழங்கிய கலா நெஞ்சங்களுக்கும், வாசக அன்பர்களுக்கும என் இதயம் நிறைந்த புத்தாண்டு வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் பெரு மகிழ்வு காண்கிறேன்.

**வாசியுங்கள்! நேசியுங்கள்!**

*என்றும் உங்கள் வீணை மைந்தன்*

- கிரகப் பொருத்தம் பார்த்தல்
- சுபமுகூர்த்தம் கணித்தல்
- சாதகக் குறிப்பு கணித்தல்
- பலன் பார்த்தல்
- எண் சோதிடப்படி ஆலோசனை கூறுதல்



☎: 299-8361


## மெய்நெறி

* கற்றவர் கூறும் நல்வழி கேட்டு ஒற்றுமை பேணி உலகினில் வாழ்வோம்
* எல்லா மனிதரும் மனிதராய் வாழ நல்வழி கூறும் சமயிகள் ஆவோம்.
* புற இருள் போக்கிடும் நெய்யொளி போல அகவிருள் நீக்கிட ஆலயம் போவோம்
* எம்மை நாம் ஆளவும் உலகினை ஆளவும் கள்ளம் ஒன்றல்லாக் கருணையைச் சொரிவோம்
* நற்குணம் கொண்டவன் இறைவன் என்றறிவோம்.
* நற்குணம் கொண்டே நல்வழி நாடுவோம்
* காரிருள் போக்கிடும் கதிரவன் போல அறியாமை நீக்கி அறிவொளி பெறுவோம்
* குற்றங்கள் பார்க்கின் சுற்றங்கள் இல்லை சமநிலை உணர்ந்தே குணம் நிலை கொள்வோம்
* பால் நினைந்தூட்டும் தாயினைப் போல ஏழைகள் வாழ்வை எழில் பெறச் செய்வோம்.

## கணிணிக்கான தமிழ் சொல் அகராதி

'யாழ் இணையம்' Wep Page இல் வந்த சொற்கள்

| | |
|---|---|
| About | பற்றி |
| Accessories | பயன்பாடுகள் |
| Adjective | பெயரடை |
| Adverb | வினையடை |
| Alignment | ஒழுங்கமை |
| Alphabet | எழுத்து |
| Alt(key) | மாற்று (விசை) |
| Annexure | இணைப்பு |
| Antonym Dictonare | எதிர்ச்சொல் அகராதி |
| Auto Save | தானாக சேமி |
| Backgroung | பின்புலம் |
| Bar | பட்டை |
| Bold | தடிப்பு |
| Bold Italics | தடித்த சாய்வு |
| BookMark | அடையாளக்குறி |
| Break | முறி |
| Browser | இணைய உலாவி |
| Bullets and Numbering | பொட்டு - எண்ணிடுதல் |
| By Defult | உள்ளிருப்பால் |
| Calculator | கணிப்பான் |
| Calendar | நாள்காட்டி |
| Cancel | விடு |
| Caps (Key) | நிலைமேல் வரிசை (விசை) |
| Center | நடு |
| Change | மாற்று |
| Change All | அனைத்தையும் மாற்று |
| Chart | நிரல்படம் |
| City | ஊர் |
| Colour | நிறம் |
| Column | நெடுவரிசை |
| Compact Disc | குறுவட்டு |
| Complete Word | முழுச்சொல் |
| Computer | கணிணி |
| Copy | பிரதி |
| Ctrl (Key) | கட்டு (விசை) |
| Cut | வெட்டு |

(தொடரும்)




# T. S. AUTO

SPECIALIST TOYOTA HONDA


MOTOR VEHICLE SPECIALISTS

FOR COMPLETE AUTO WORKS AND DETAILING


- We Sell Quality Used Cars
- Licensed Mechanics on duty
- Guaranteed Services
- Reasonable Rates
- Free Visual Inspection and Proper Advice
- Licensed to do Air Condition Services
- We Rebuild Alternators & Starters
- Rust Proofing
- Body Work and paint

TUNE - UP •
BRAKES •
GENERAL MAINTENANCE •
ELECTRICAL WORKS •
ALL KIND OF REPAIRS •

OIL & FILTER CHANGE WITH CASTROL GTX



உள்ளூர், இறக்குமதி செய்யப்பட்ட சகல ரக வாகனங்களுக்கும் அனுபவம் வாய்ந்த மெக்கானிக்குகளால் சிறந்த முறையில் திருத்திக் கொள்ள நாடுங்கள்




Call: Kumar

Tel: (416) 293-3395 (416) 891-2893

2305 Markham Road #24, Scarborough, Ont. M1B 2W3


ளயும், பொங்கல் வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கின்றது.

| | | U.S. |
|---|---|---|
| ப்பன் ஆலயம் | $1197.88 | |
| ங்கை அம்மன் ஆலயம் | $2125.40 | $12 |
| பதுர்க்கா மிசிசாகா | $491.08 | |
| ண்ட் பிள்ளையார் | $6458.10 | $10 |
| பூசணி அம்மன் | $1200.74 | $20 |
| சாக்கா முத்துமாரி அம்மன் | $586.88 | |
| த்தி விநாயகர் | $620.41 | |
| | $12680.49 | $42 |


...லயத்தில் மார்கழி 26, 27 ஆம் திகதிகளில் உண்டியல் மூலம்


## பூச்சிகளை அழிக்கவே முடியாதா?
## PEST CONTROL

* எலிகள் * கரப்பான் பூச்சிகள்
* எறும்புகள் * சிலந்திகள்



போன்றவற்றை முற்றாக அழித்து நிவாரணம் பெற இன்றே தொடர்பு கொள்ளுங்கள்.



(416) 892-4994

7 நாட்களும் அழைக்கலாம்



* 100% முற்றாக அழிக்க முடியும் என்று எழுத்து மூலம் தரப்படும்.
* ஒருதடவை அணுகுங்கள் உண்மை புரியும்.
* WE ARE QUALIFIED, PROFESSIONAL, INSURED AND BONDED.
* NO NEED TO LEAVE TO HOME OR REMOVE DISHES DURING TREATMENT.



## நிதியும் மூலதனமும்

### இதோ உங்களுடைய Tax Refund பணத்தை உபயோகிக்க கூடிய 7 சிறந்த வழிகள்

1. Pay Down Debt - அதாவது நீங்கள் பெரும் தொகையாக Balance ஐ உங்களுடைய Credit Card ல் வைத்திருந்தால் நீங்கள் அதை கட்டி மிகுதியை குறைப்பது சிறந்ததாகும். ஏனெனில் $1000 Credit Card Bill 16.5% வட்டி விகிதப்படி ஒரு வருடத்திற்கு $134.16 வட்டி நீங்கள் கட்ட வேண்டும். நீங்கள் ஒவ்வொரு மாதமும் மிககுறைந்தளவை கட்டி வந்தால் (Minimum Payment) அதாவது மொத்த தொகையின் 5% விகிதம்) வருட முடிவில் நீங்கள் $636 கட்ட வேண்டி இருக்கும்.

2. Pay Off Your RRSP Loan - அதனால் நீங்கள் வட்டியாக கட்டும் பணத்தை சேமிக்கலாம். அது மாத்திரமல்ல உங்களது மாதாந்த கட்டு பணத்தை வேறு தேவைகளுக்காக உபயோகிக்கலாம்.

3. Pay Down Your Mortgage - இதனால் நீங்கள் பெருந்தொகையான வட்டியை சேமிக்ககூடியதாக இருக்கிறது. உதாரணமாக நீங்கள் $1000 Mortgageற்கு PrePayment ஆக கட்டினால் (25 வருட கட்டு தவணை) 7% வட்டி விகிதிம் உங்கள் சேமிப்பு $4,175.22 ஆக இருக்கும்.

4. Earmark The Refund For A Major Purchase or Expenditure - அதாவது உங்களுக்கு கிடைக்கும் Tax Refund ஐ ஏதாவது ஒரு பெரிய பொருட்களை வாங்கும் போது பாவித்தால் நீங்கள் அதற்கு கொடுக்கும் வட்டியிலிருந்து சிறிதளவு சேமிக்கலாம்.

5. Save For Your Child's Education - உங்கள் குழந்தைகளின் எதிர்கால மேற்படிப்பிற்காக RESP எனும் சேமிப்பை ஆரம்பிக்கலாம்.

6. Bolster Your Emergency Fund - அதாவது எல்லோரும் ஒரு அவசர காலத்திற்கென ஒரு பகுதி பணத்தை எப்போதும் எடுக்க கூடியதாக வைத்திருத்தல் வேண்டும். அத்தொகை குறைந்தளவு 6 மாத செலவுகளை பராமரிப்பதற்கேற்ற அளவாக இருத்தல் வேண்டும்.

7. Make A Lump sum RRSP Contribution for the Current Tax Year - எவ்வாறு கெதியாக நீங்கள் RRSP ல் சேமிக்கிறீர்களோ அவ்வளவிற்கதிகமாக உங்கள் சேமிப்பு அதிகரிக்கின்றது. (Com Pounding Effect) அதாவது கூட்டு வட்டியின் விளையாட்டு.

*Jay Ahamparam -416-498-4743*

9 ஆண்டு காலம் வீளம்பரமாய்
பணிகள் பல செய்து
பல்லாயிரம் மக்களின் இதயங்களில்
பதவி உயர்வு பெற்று
புத்தாயிரம் தனில புதுப்பொலிவுடன்
உலகதமிழோசையாகி
புலம் பெயர்ந்த தமிழர்களின்
பெருமை தனைப் போற்ற நீ
நீடுழி வாழியவே என வாழ்த்தும்

கொக்குவில் இந்துக் கல்லூரி
பழைய மாணவர் சங்கம் -கனடா


## ரதீக்கா நகை மாளிகை

- உங்கள் விருப்பமோ குறைந்த விலையில் வாங்குவது, எங்கள் விருப்பமோ இனிமேல் யாரும் குறைக்க முடியாத விலையில் தருவது
- உங்கள் விருப்பமோ குறித்த தவணையில் பெறுவது, எங்கள் விருப்பமோ ஒருநாள் ஏனும் முந்தியே தருவது
- உங்கள் விருப்பமோ இந்த நகைகளை எங்கே வாங்கியது என நண்பர்கள் கேட்பது, எங்கள் விருப்பமோ ரதீக்காவில் வாங்கியது என நீங்கள் பெருமையுடன் சொல்வது
- தாலிக்கும் நகைகளுக்கும் ஓடர் கொடுத்தாச்சு, காரை எடு இனிக் கூறை அலுவலைப்பார்ப்பம் என்று அலைய வேண்டாம். ரதீக்கா நகைமாளிகையும் மஞ்சுளா பஷனும் ஒரே இடத்தில்.
- இப்பொழுது புதிதாக அமைக்கப்பட்ட மிகப்பிரமாண்டமான காட்சியறையில் ரதீக்கா நகைமாளிகை உங்கள் தேவைகளைப் பூர்த்தி செய்கிறது.

ரதீக்காவின் புதிய விலாசம்

**RATHICKA JEWELLERY**

5635 Finch Ave. East, Unit 3, (Finch and Tapscott)
Scarborough, Ontario, M1B 5K9, Canada

**Tel: (416) 299-1343**

# NEW Technology
## Security and Sound Inc.

**January Special**
**Basic Alarm**
**$174.99**





**HARADA®**
**REMOTE CONTROL CAR STARTER**
*Standard range 500 feet
*Keyless entry
**$169.99**


**REMOTE CONTROL CAR STARTER WITH ALARM**





**$299.99**




**Remote Starter**
**$249.99**





*Auto Security
*Auto Starter
*Pager
*Big Display
*Quarter Mile Range
**$699.99**




**Remote Starter**
**$249.99**

**Fog Alarm**
From
**Install $84.99**

Phone : 416-335-4070
Fax : 416-335-9936
Moe - Cell : 416-451-0287
Shanger - Cell: 416-451-4517




**80 Dynamic Drive, Unit# 25, Scarborough, Ont. M1V 5A5**

# "ராசம்மாவின் ராஜ்யம்"



நகைச்சுவைத் தொடர்... (14)

சிரித்து சிந்திக்க



*-கலகலப்பு தீசன்-*



ஒரு மனிதனுக்கு பிரச்சினைகள் வரும்போது அடுத்தடுத்து வரும் ஒரு சிறிய பிரச்சினை வரும்பொழுது அடுத்து ஒரு பெரிய பிரச்சினை வந்தால் அந்த சிறிய பிரச்சினை அப்படியே அமிழ்ந்துவிடும். (சில நாடுகளில் அரசியல் கூட அப்படித்தான்)

உலகர் வீட்டு பிரச்சினை ரூபனில் தொடங்கி இன்று திருமண நாள் பார்க்க தொடங்கிய அமளிதுமளி ஓயுமுன் மிலேனிய பிரச்சினை, வாங்கலாம், விற்கலாம் வரையும் போய் அல்லோல கல்லோப் படுகிறது. தலைக்கு வந்தது தலைப்பாகையுடன் போயிற்று என்பார்கள். ஆனால் வாங்கிய பொருட்கள் தலைக்கு மேலல்லவா இருக்கிறது.



ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது

உலகண்ணை ஆருக்கன் Call எடுக்கப்போறியளோ.... எண்டபடி ரெலிபோனை ரிசீவரைத் தூக்கியபடி கேட்டா. கதைக்கும் நிலையிலா..... உலகரும் ராசம்மாக்காவும் இருக்கிறார்கள். இடி... விழுந்தால் எப்படியிருக்கும் அதுவும் பங்கரில் இருக்கும் போது இடிவிழுந்தால்.....


யாருக்கு ரெலிபோன் எடுத்தாலும் அரிசி பொறுத்துப் போச்சு தண்ணி பொறுத்துப் போச்சு மெழுகுதிரி பொறுத்துப்போச்சு தோசைக்கு உழுந்தரைச்சு Eveready தோசை சுடலாம் என இருந்த குடும்பம் எத்தனை என உலகர் சிந்தித்துக் கொண்டிருக்கும் போது ராசாத்தியக்காவின் குரல் தேர்தல் பிரசார காலத்தில் கொழும்பு வீதிகளில் ஸ்பீக்கரில் கேட்டது போல் கணீர் என்றது.

என்ன... சின்ன ஜெனறேற்றர் வாங்கினீர்களோ.... எட... திருப்பி வாங்கமாட்டார்கள் தானே... எனக்கு தெரியும் ஒண்டும் நடக்காதெண்டு ஓ.... இப்படி ராசாத்தியக்கா... திணறாமல் பொய் சொன்னதை உலகரால் நம்ப முடியவில்லை. 25ம் திகதியிலிருந்து அவுஸ்திரேலியாவில் இருக்கும் விட்ட தொட்ட சொந்தங்களை வலிய அழைத்து பெல் கனடாவிற்கு மாபெரும் உழைப்புக் காட்டிய ராசாத்தியக்கா தானொன்றும் பயப்படவில்லை யென்பதும், 31ஆம் திகதி அவுஸ்திரேலியாவில் வருடம் பிறந்து விட்டது என்பதை அறிய பலருக்கு ஹப்பி நியூ இயர் சொல்ல

**HAPPY NEW YEAR**



உங்கை ரெலிபோன்வேலை செய்யுது... றேடியோச் சத்தமும் கேக்குது... அப்ப கறன்ற் நிக்கேல்லை எண்டு மெல்லமாக மிலேனிய காச்சலை கேள்வியால் நிவர்த்தி செய்த ராசாத்தியக்கா உடனே இங்கு பலருக்கு எடுத்து வாங்கிய தண்ணியிலிருந்து தவிட்டுப் பாண்வரை கடைகள் சேல்போடுவதை விட மிகவும் குறைந்த விலையில் விற்கப் பட்ட பாடு உலகருக்கும் ராசம்மாவுக்கும் தான் தெரியும். மற்றது நாளைக்கு நேரமிருந்தால் **Bank** எக்கவுண்ட ஒண்டு திறக்க வேணும் எண்டு ராசாத்தி கதைக்க உலகர் விறைத்துப் போனார்.



**NO REFUND!**
**NO RETURN!**

ஒழுங்காக உழைப்பவனுக்கே... ஒழுங்காக Bank எக்கவுண்ட இல்லை. ஓ... தெரியாதே... (ராசாத்தியக்கா தொடர்ந்தா) பாங்க் பிரச்சினை வந்தாலும் எண்டு கிடந்த காசை எடுப்பம் எண்டா. ஒண்டில் குளோஸ் பண்ணு அல்லது கிடக்கிற பணத்தை அப்படியே விடு என்று பாங் மனேச்சர் சொல்ல எனக்கு M.P. யை தெரியும் நான் கனேடியன் சிற்றிசன் M.P. யை கொண்டு கதைப்பன் என்று வெருட்ட அவர் ஒன்றுக்கும் மசியவில்லை. 2 மணிநேர பயங்கர செ(ா)ல் தாக்குதலின் பின் தனது சேவிங் எக்கவுண்டில் உள்ள 22 டொலர் 83 சதத்துடன் வெளியே வந்த ராசாத்தியக்காவுக்கு எக்கவுண்ட் இல்லாத-தால் அவருக்கு வரும் மாதாந்த வருமானம் திரும்பியது நேற்றுத்தான் தெரியும். இப்ப எக்கவுண்ட திறக்க கோ. சைன்பண்ண ஒரு ஆள்தேவை.

**மிலினியம்**
**தைப்பொங்கல்**
**வாழ்த்துக்கள்**



**பொங்கல் வந்தது பலருக்கு பிரச்சினையில்லை. 'மிலேனியம் பொங்கல்' அல்லவா.... வாங்கிய சாமான்கள் வீட்டில் ஸ்ரொக் இருக்கும். என்ன.. இரவு வேலையால் வந்து தூங்கியவர் பிந்தி எழுவது போல... சூரியனும் சற்று பிந்தித்தான் எழுவார்... பூட்டிய வீட்டில் புழுகத்துடன் ஒரு பொங்கல்.**

**தைபிறந்து விட்டது என்ன? வழி பிறக்கும்.**

*(தொடரும்)*

கொலம்பியா..

1ம் பக்கத் தொடர்ச்சி

வெள்ளையர்கள், கறுப்பர்கள், பூர்வீகக் குடிகள் என பல்வேறு இனத்தவர்களும் இங்கு வாழ்கின்றனர். சுமார் நாற்பத்தைந்து தினசரி பத்திரிகைகள் இங்கு வெளிவருகின்றன. பதினெட்டு வயதுக்கு மேல் வாக்குரிமை உள்ள இந் நாட்டில் இருபத்தி மூன்று திணைக்களங்களாக பிரிக்கப்பட்ட நிர்வாகம் நடாத்தப்படுகின்றது.

மக்களினால் தேர்ந்து எடுக்கப்படும் ஜனாதிபதி, ஜனாதிபதியின் பிரதிநிதி, அமைச்சரவை ஆகியன நிறைவேற்று அதிகாரிகளாக செயல்படுவார்கள்.


ஸ்பானிஷ் சட்டங்களை பின்பற்றும்இந்நாட்டில், உயர் நீதிமன்றம் நீதித துறையினை கண்காணிக்கும் அமைப்பாக செயல்படும்.

மக்களினால் தேர்ந்து எடுக்கப்டும் பாராளுமன்ற பிரதிநிதிகளினால அமைக்கப்பட்ட மேல் கால, கீழ் அவை என்பன சட்டமியற்றும் அமைப்பாக செயல்பட்ட வருகின்றது. இந்நாட்டின் பொருளாதாரம் சற்று மந்தமாக இரந்தாலும், ஏனைய லற்றீன் அமெரிக்க [தென் அமெரிக்க] நாடுகளுடன ஒப்பிட்டு பார்க்கும் போது கணிசமான அளவு முன்னேற்றமான தாகும்.

விவசாய உற்பத்பொருட்களுடன் பெற்றோலியமும் இங்கு இருந்து ஏனைய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதன் மூலம் தேசிய வருமானத்தினை பெற்றுக்கொள்கின்றது.

சுமார் 37,500 ஹெக்ரர் பரப்பளவில் கன்னாபிஸ் [Cannabis], கோகா[Coca], ஓபியம் [Opium] போன்ற போதை வஸ்துக்கள் பயிர்செய்கை செய்யப்பட்டு சட்டவிரோதமான முறையில் பல தனியார் கோஷ்டிகளினால அமெரிக்காவுக்கும் ஏனைய உலகின்பல நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்படுகின்றது. இத்தகைய போதை வஸ்து உற்பத்தியால் சர்வதேச சந்தையில் இந்நாட்டின் மதிப்பீடு குறைக்கப்படுகின்றது.

காலநிலையின் படி தலைநகரான 'கொற்றா' சற்று குளிராக இருந்தாலும் ஏனைய இடங்கள் வெப்பமான பகுதியாகும். *-மாலினி பஞ்சலிங்கம்*

பூட்டு? சாவி?

**KEERTH LOGSMITH**

**வீடு-வியாபாரம்-தொழிலகம்**

*வீட்டு திறப்புகள் தொலைந்து விட்டதா? மாற்ற வேண்டுமா? மற்றும் உங்களது சகலவித திறப்பு சம்பந்தமான பிரச்சினைகளிற்கு தீர்வு காண நினைவில் வைத்திருக்க வேண்டிய தொலைபேசி இலக்கம்*



**(416) 439-3709**

Pager: **375-7330**

Compu Service
COMPUTERS & NETWORK
(416) 399-3235 - (905) 432-2422

**CONTACT - ALAN SIVA**
@ (416) 431-3753
(416) 438-4357
(416) 399-3235

**COMPUSERVICE International**

**COMPUTER SALES**
**NEW & USED**
**NETWORK DESIGN**
**& INSTALLATION**
(905) 432-2422

**REPAIRS**
**UPGRADES**
CD BACKUPS
SOFTWARES
*FAX: (416) 431-5828

Email: compuservice@pathcom.com


** ஆன்மிகச் சிந்தனை*

*மிகச் சிறந்த மனிதன் எந்த நிலையில் இருந்தாலும் நல்லவற்றையும் சிறந்தவற்றையுமே யோசிக்கிறான், செய்கிறான். கஷ்டம், நோய், துக்கம் ஆகிய நிலைகளில் அவன் வெறுப்படைவதில்லை. மாறாக பொறுமையோடு இருக்கிறான். இறைவனைத் தியானிக்கிறான். சந்தோஷ நிலையில் அவன் உற்சாகத்தில் குதிப்பதில்லை. அதற்குப் பதிலாக இறைவனுக்கு நன்றி செலுத்துகிறான். இந்த மன நிலையை நாம் ஒவ்வொருவரும் பெற்று சிறக்க வேண்டும் என்கிறார் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள்.*

- ஆ. காதர் கான்


**RAAJ WATCH WORK**



சகல விதமான மணிக்கூடுகளும் **(Watch & Clock)** குறைந்த கட்டணத்தில், உத்தரவாதத்துடன் குறித்த தவணையில் திருத்திக் கொள்வதற்கு நகரில் நாட வேண்டிய ஸ்தாபனம்.

**NATHAN ☎: (416) 265-5580**

2885 LAWRENCE AVE. EAST , BRIMLY/ LAWRENCE (Close to Biway)

# ஒன்ராரியோ மாகாணத்தில் வாகனம் செலுத்துதல்?

-சிவ பஞ்சலிங்கம்



## பகுதி (23)

### வீதிப்பரீட்சைகள் [Road Test]

வீதிப்பரீட்சைகள் என்பது ஒன்ராரியோ மாகாணத்தில் வாகனம் செலுத்துபவர்களுக்கு இரண்டு வகையாக நடாத்தப்படும்.

a. முதலாவது வீதிப் பரீட்சை [G (1) Road Test]

b. இரண்டாவது வீதிப் பரீட்சை [G (2) Road Test]

முதலாவது வீதிப் பரீட்சையும் இரண்டாவது வீதிப் பரீட்சையும் பின்வரும் விடயங்களில் வேறுபடுகின்றது.

1. முதலாவது வீதிப் பரீட்சையானது வாகனம் செலுத்தும் ஒருவர் தனியாக எவருடைய உதவியும் இல்லாமல் வாகனத்தினை செலுத்தும் தகைமை உள்ளதா என்பதனை அங்கீகாரம் வழங்கும் பரீட்சையாகும். இப் பரீட்சையில் சித்தியடைந்தவர் எந்நேரங்களிலும், எந்த வீதியிலும் வாகனம் செலுத்தலாம். [மதுபானம் சிறிவளவேனும் அருந்தியிருக்க கூடாது என்பதும், வாகனத்தின் பின் ஆசனத்தில் அமர்ந்திருப்போரும் ஆசனப் பட்டி அணிந்து இருத்தல் வேண்டும என்பதும் கட்டுப்பாடு]

ஆனால் இரண்டாவது வீதிப் பரீட்சையானது ஏற்கனவே வாகனம் செலுத்திக் கொண்டிருப்பவர்கள் தொடர்ந்தும் 'வாகனம் செலுத்துதல்' தொடர்பான ஒரு 'முதிர்ச்சி நிலையினை' [Maturity] பற்றிய மதிப்பீடு செய்யும் பரீட்சையாகும். முக்கியமாக சரியான நேரத்தில் சரியான புலன்களினுடாக மேற்கொள்ளும் அவதானங்கள் [Correct Time & Correct Observation] என்பவையே இங்கு ஆழமாக அவதானிக்கப்படும்.

2. முதலாவது வீதிப் பரீட்சை சுமார் 15 - 20 நிமிடங்கள் மட்டுமே நடைபெறும். ஆனால் இரண்டாவது வீதிப் பரீட்சை நாற்பத்தைந்து நிமிடங்களுக்கு குறையாமல் நடாத்தப்படும். [ஆனால் அண்மையில் இப் பரீட்சை நேரம் என்பது குறைக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிட வேண்டிய விடயமாகும்.]

3. முதலாவது வீதிப் பரீட்டை என்பது பிரதான வீதிகள், குடியிருப்பு வீதிகள், மற்றும் வாகனத் தரிப்பு இடங்களினூடாக மட்டும் நடைபெறும்.
இரண்டாவது வீதிப் பரீட்சை இவ் இடங்களுடன் அதிவேக தெருக்களிலும் நடைபெறும்.

4. முதலாவது வீதிப் பரீட்டைக்கு போக்குவரத்து அமைச்சினால் அறவிடப்படும் கட்டணம் $40 டொலர்கள்.
இரண்டாவது வீதிப் பரீட்சைக்கு $75 டொலர்கள் கட்டணம் அறவிடப்படும்.

5. முதலாவது வீதிப் பரீட்டைக்கு தோற்றுவதற்காக பரீட்சை நிலையத்திற்கு வருபவர் எந்தவொரு வாகனத்தினையும் தனியாக எடுத்து ஓட்டிக் கொண்டு வரமுடியாது. ஏனெனில் அவர் சாரதி அனுமதிப் பத்திரம் இல்லாதவராகவே கருதப்படும். ஆனால் இரண்டாவது வீதிப் பரீட்சையில் ஏற்கனவே வாகனம் செலுத்தி கொண்டிருப்பவரே பரீட்சைக்கு தோற்றுவதால் தமது வாகனத்தினை ஒருவரின் உதவியும் இல்லாமல் தாமே செலுத்தி வந்து பரீட்சைக்கு தோற்றலாம். தற்சமயம் வீதிப் பரீட்டையில் சித்தியடையாவிட்டாலும் ஏற்கனவே செலுத்தும் உரிமைப் பத்திரம் உள்ளதால் வீட்டை நோக்கி வாகனத்தில் தாமே திரும்பிச் செல்லலாம்.

6. முதலாவது வீதிப் பரீட்சையில் பரீட்சையாளரால் மதிப்பீடு செய்யப்படும் பத்திரம் சிறியதாகவே இருக்கும்.
இரண்டாவது வீதிப் பரீட்சையில் இப்பத்திரம் சற்றுப் பெரிதாகவே இருக்கும்.

7. முதலாவது வீதிப் பரீட்சையில் சுற்றிவரவுள்ள ஏனைய வாகனங்கள், பாதசாரிகள் யாவற்றினதும் முழுமையான அவதானம் உள்ள பாதுகாப்பான வாகனம் தனியாக செலுத்தும் தகைமை உள்ளவரா என்பது ஓரளவு மேலோட்டமாக பரிசீலனை செய்யப்படும்.
இரண்டாவது வீதிப் பரீட்சையில் வாகனத்தின் ஒவ்வொரு அசைவிலும், ஏனைய வாகனங்கள், பாதசாரிகளின் அவதானம் என்பது [Traffic Checking] மிகவும் ஆழமாகவும் நுட்பமாகவும் பரிசீலனை செய்யப்படும்.

8. முதலாவது வீதிப் பரீட்சையில் திருப்பங்கள் என்பது வாகனம் செலுத்துகையின் ஒன்று அல்லது இரண்டு முறை பரிசீலனை செய்து பார்க்கப்படும். ஆனால் இரண்டாவது வீதிப் பரீட்சையில் இவைகள் பல முறைகள் பரிசீலனை செய்து பார்க்கப்படும்.

9. முதலாவது வீதிப் பரீட்டையில் ஏற்ற, இறக்க வாகன தரிப்புகள் சமாந்தர வாகன தரிப்புகள் என்பன ஒவ்வொரு முறையே பரிசீலனை செய்து பார்க்கப்படும்.
இரண்டாவது வீதிப் பரீட்சையில் ஒருமுறைக்கு மேலாக இரண்டு முறையும் பரிசீலனை செய்து பார்க்கப்படும் சந்தர்ப்பங்களும் உண்டு

10. வீதிப் பரீட்சைக்கு திகதி நிர்ணயம் செய்தல் என்பது முதலாவது வீதிப் பரீட்சைக்கு தோற்றுவதற்கு உரிய தகைமைகள் இருந்தால் <u>நீண்டகாலம் எடுக்கமாட்டது.</u> ஆனால் இரண்டாவது வீதிப் பரீட்சைக்கு திகதி நிர்ணயம் செய்வது என்பது தற்போது உள்ள நிலைமையில் காலதாமதம் எடுக்கும் விடயமாகும். [எவராவது இரத்து செய்பவர்களின் திகதி நிர்ணயிப்பினை முயற்சியால் பிடித்துக் கொள்வது என்பது விதிவிலக்கு)

மேற்குறிப்பிட்ட பத்து விடயங்களிலும் இருவீதிப்பரீட்சைகளும் ஒன்றிலிருந்து ஒன்று வேறுபடுகின்றன. அடுத்த கட்டுரைகளில் இவ்வீதிப் பரீட்சைகளின் 'பரீட்சை மதிப்பீட்டுப் பத்திரம்' (Exam Marking Sheet) என்பவற்றில் ஒவ்வொன்றாக ஆராய்வோம்.

*மேலதிக தொடர்புகளிற்கு:* ***சிவ பஞ்சலிங்கம்-(416) 321-0999***
*(Professional Licensed Instructor in Car & Class Room)*

**BANANA LEAF**
**Take-out & Catering**

*Everyday Special*
ஆடு, மாடு, புரியாணி — Free வட்டிலப்பம் — $5.50

**தினமும் ஸ்பெஷல்**

| | | |
|---|---|---|
| செவ்வாய், வெள்ளி | மரக்கறி சாப்பாடு 10 வகை கறியுடன் மத்தராஸ் தாளி (FREE POTATOES PORI) | $4.99 |
| புதன் | புட்டு, முட்டைப்பொரியல், இறால் குழம்பு சம்பல், பருப்பு | $3.99 |
| வியாழன் | 3ரொட்டி, சிக்கன் பாலுண்டி கட்டைச்சம்பல் | $3.99 |
| சனி, ஞாயிறு | மீன் சாப்பாடு, மரக்கறி வகைகளுடன் | $5.50 |
| ஞாயிறு | *LampRice* | $5.50 |
| திங்கள் | மூடப்பட்டிருக்கும். | |

431 Nugget Avenue, Unit 10, Scarborough, Ont. (Markham & Nugget)
Tel: (416) 609-9247 Pager (416) 600-1030,
(416) 704-8208 (24hrs.)

**KD FINANCIAL SERVICES**

Vamadevan Jeyamohan (Jey)
(President)
Royal Bank Approved Third Party Referral Agent
**VISA CARDS UPTO $5000**

புதியவர்கள் (Fresh Credit) அல்லது நல்ல நிலையில் கிறடிற்றை (Good Credit History) வைத்திருப்பவர்களிற்கும் வேலை செய்யும் கடிதம் (Employment Letter) உடையவர்களிற்கும் விசா காட் எடுத்துத் தரப்படும்

Tel: (416) 431-9315 Fax: (416) 431-2119
Cell: (416) 575-8427 EmailL: Jeys@ica.net
தொடர்புகளுக்கு: *weekdays - 5:30pm - 10:00 pm.*

Nada Jeyadevan Financial Rep.
Tel: -(416) 398-4760 10:00Am - 8:00pm

THE STATE OF ART WITH UPDATE TECHNOLOGY
**Ultra Graphic**®
*Your Ideas Take Best Shape*

Graphic Designs
- Colour Flyers
- Video Covers
- Books
- Invoices
- Certificate
- Magazine
- CD Covers
- Logo
- Menu
- Business Cards
- Labels
- Calanders

Roll Labels
- Bar Code Labels
- Product Labels
- Price Tags
- Bumper Stickers
- Address Labels
- Polyester Labels
- Clear Labels

Other Services
- Instant Rubber Stamps
- Instant Business Cards
- Foil Stamping
- Wedding Cards
- Laser Color Print (8½" x 11")
- Scanning
- Wedding Greetings (11" x 17")

All Your Signs Needs
- Banners
- Window Signs
- Truck Signs
- Store Front Signs
- A- Board Signs
- Channal Board
- Neon Signs

அனைவருக்கும் எமது புத்தாண்டு வாழ்த்துக்கள்!
**Tel: (416) 282-5859**
*e-mail: ultrag@yesic.com*

# சாரதிகளே!


# TRAFFIC TICKET

# பெற்றீர்களா?



- Speeding
- Stop Sign
- Red Light
- Seat Belt
- Improper Turn

**Peter Joseph**



- Careless Driving
- Accidents
- Fail to Remain/Report
- Over speed
- Impaired Driving
- Drive under suspension
- Dangerous Driving

- ஒரு முறை அழையுங்கள்.
- உண்மையை உணருங்கள்
- நண்பர்களுக்கும் கூறுங்கள்

**$150 மட்டுமே**

24 மணி நேர சேவை

புள்ளிகளைக் காப்பாற்றுங்கள்
முற்பணம் தேவையில்லை
நீங்களும் வரவேண்டியதில்லை
தேவை உங்கள் ரிக்கட் மட்டுமே

பல ஆண்டுகள் வெற்றியின் அனுபவங்கள் பீற்றர் ஜோசப்

## Traffic Ticket Specialists

**Tel: (416) 537-7737 Fax: (416) 537-9035**


## மதங்கள் தரும் பாடங்கள்

தருபவர்- இந்து

நாம் வாழும் இந்த உலகமானது முதலில் எப்படித்தோன்றியது என்பதைப் பற்றி பலவிதமான கருத்துக்களை நாம் படித்திருக்கின்றோம். எத்தனையோ அறிஞர்கள் ஆய்வாளர்கள் பலவிதமான முடிவுகளை வெளியிட்டிருக்கின்றார்கள். இவற்றின் பொதுக் கருத்தானது முன்னொரு காலத்தில் ஒரே ஒரு சிறிய பொருள் இருந்ததாகவும் அது ஏதோ ஒரு காரணத்தினால் வெடித்து சிதறியதாகவும் அப்படி வெடித்துச் சிதறிய போது வெளிப்பட்ட நெருப்பு, வாயு, புகை போன்றவற்றின் பரிமாணங்களே இந்த பிரபஞ்சம். அத்தோடு அச்சமயத்தில் வெளிப்பட்ட சக்தி காந்த சக்தியாகி இந்த அண்டம் முழுவதிலும் நிறைந்து ஒன்றையொன்று இழுக்கும் ஈர்ப்பு சக்தியாக மாறியுள்ளது என்றும் கூறப்படுகின்றது.

இந்த அண்ட சராசரம் அகன்று விரிந்து கொண்டே போகின்றது என்று கருதப்பட்டாலும் புவியீர்ப்பு சக்திக்கு எதிர்ப்பு சக்தி ஒன்று இருப்பதையும் அந்த சக்தி மூலம் இப்பிரபஞ்சம் வேறு ஒரு புள்ளியை நோக்கி ஓடி ஒடுங்கிக் கொண்டிருப்பதையும் மிகச் சமீபத்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக குறிப்பொன்று கூறுகின்றது.

இவ்வாறு தோன்றிய இந்த உலகிலே மதம் என்று சொல்லக்கூடிய அமைப்பு ஏதும் இல்லாத காலத்திலே இந்தியாவில் முறையான வாழ்க்கை அமைத்து அந்த நெறியிலே சிறப்புற வாழ்ந்து வந்தனர். இந்தியாவிற்கு வந்த வெளிநாட்டினர் இந்த வாழ்க்கை நெறிமுறையைப் பற்றி குறிப்பிடும்போது அதை இந்தியர் மதம் என்று குறிப்பிட்டனர். அதுவே பின்னர் இந்திய மதம், இந்து மதம் என மாற்றம் அடைந்து வழங்கப்பட்டு வருவதாக வரலாறு குறிப்பிடுகின்றது. இந்துக்களது வரலாற்றுக் குறிப்பு எவ்வளவு மனநிறைவைத் தருகின்றது. உலக அறிஞர்களின் சிந்தனையைக் கவரும் வகையில் ஆழ்ந்த கருத்துக்கள் மிக்க கொள்கைகள் நிறைந்தது எனவும் கவலைகளை மறந்து மனச் சாந்தி, மனநிறைவு அடையக் கூடிய தியான முறைகளைக் கொண்டது என்பது போன்ற கருத்துக்களை இந்துமதம் பற்றி வெளிநாட்டினர் குறிப்பிடக் கூடிய வகையில் இந்து மதம் வழிகாட்டல்களைக் கொண்டுள்ளது. இவ்வளவு சிறப்பு மிக்க இந்து மதத்திலே பிறந்த பலர் தம் மதத்தைப் பற்றி எவ்வளவு அறிந்து வைத்திருக்கின்றனர்? இந்து மதம் எப்படி வழி காட்டுகின்றது? எந்த வழியைக் காட்டுகின்றது? இந்த தத்துவங்களை நாம் எவ்வளவு தூரம் அறிந்து வைத்திருக்கின்றோம்? சிந்தியுங்கள்...

(தொடரும்)


மொன்றியால் கலைஞர்கள் இணைந்து

வழங்கும் இவ்வாண்டுக்கான மாபெரும்

## கலைவிழா

இடம்: சோவே அன் மேரி கல்லூரி (மெற்றோ - சோவே)
காலம்: ஜனவரி 22, 2000
நேரம்: மாலை 5.00 மணி

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
(இக் கலைநிகழ்ச்சியில் கிடைக்கும் நிதிமுழுவதும் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்திற்கு அன்பளிப்பாக வழங்கப்படும்.)

**பண்டாரவன்னியன் நாடக நூல்**

பண்டாரவன்னியன் நாடக நூல் என்னும் புத்தகம்
விற்பனைக்குண்டு. எழுதியவர் : முல்லை மணி
தொடர்புகளுக்கு : வன்னித் தமிழ்க் கலாச்சார அமைப்பு
**291-8446 / 431-3331**

**MECHANIC WANTED**

**SCARBOROUGH** இல் இருக்கும் கார் திருத்தும் நிறுவனத்திற்கு அனுபவமுடைய **Mechanic** தேவை **Tel:: 750-1573**

**அறிவித்தல்**

